விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை (14.09.2021) தொலைபேசி 222 3378, 222 7329 ஒலி 269

இலங்கையில் முன்னேற்றம் இல்லை

# நிர்வாகக் கட்டமைப்பு இராணுவ மயமாகின்றது



## ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது மனித உரிமைகள் ஆணையாளர் காட்டம்

*(ஜெனிவா)*

- இலங்கையின் அவசரகால விதிமுறைகள் தொடர்பில் மனித உரிமைகள் பேரவை கண்காணிக்கின்றது.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும்.
- காணாமல்போனோர் அலுவலகம் வெளிப்படைத்தன்மையை பேண வேண்டும்.

▶19

## எரிபொருள், மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

### வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)
நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது என்பதை நாம் மறுக்கவில்லை.
ஆனால் நாட்டின் தற்போதைய நிலையில் பொருட்களின் விலை குறை

▶19

## அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கின்ற ஐ.நாவின் அறிக்கையை வரவேற்கின்றோம்

### கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்



(கொழும்பு)
ஜெனிவாவில் நேற்று வெளியிடப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை சம்பந்தமான வாய்மூல முன்னேற்ற அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது எனக்கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்

▶19

## நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கையை நெருக்கமாக அவதானியுங்கள்

### உறுப்பு நாடுகளிடம் ஐ.நா ஆணையாளர் வலியுறுத்து

(ஜெனிவா)
நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளின் நம்பகமான முன்னேற்றங்கள் குறித்து உறுப்பு நாடுகள் மிக நெருக்கமாக அவதானம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை

▶19

## மன்னார் பிரதேச சபை தவிசாளர் பதவி நீக்கம்

### அதிகார முறைகேடு உறுதியானதால் ஆளுநர் அதிரடி உத்தரவு

(மன்னார்)
மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் சாகுல் கமீது முகம்மது முஜாஹிரின் தவிசாளர் மற்றும் பிரதேசசபைஉறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்

▶19



யாழ்.பல்கலை மருத்துவ பீடத்தின் புதிய பீடாதிபதியாக சுரேந்திரகுமாரன் தெரிவு

0ஆம் பக்கம் பார்க்க

## நாட்டில் கொரோனா பரவல்; சாதகமான சூழ்நிலை இல்லை

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் தினசரி பதிவாகும் கோவிட் - 19 தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சாதகமான சூழ்நிலை காணப்படவில்லை என்று சுகா

▶19

பொலநறுவையில்

## தமிழ், தெலுங்கு செப்பு பட்டயம் கண்டுபிடிப்பு

11 ஆம் பக்கம் பார்க்க

## கொரோனா

**135** பலி

**2,560** தொற்று

(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும்

▶19

## ஐ.நாவின் செயற்பாடு நம்பிக்கை தரவில்லை

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கோட்பாடுகள் இன்று பின்பற்றப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகள் நம்பிக்கை தரக்கூடியதாக

▶19

## வடக்கில் மேலும் 7 பேர் கோவிட்டால் மரணம்

(யாழ்ப்பாணம்)
வவுனியாவில் 3 பேர் உட்பட வடக்கில் 7 பேர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.
வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில்

▶19

# வலம்புரியில் வெளியான செய்திக்கு சங்கானை ப.நோ.கூ சங்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 ஆம் திகதிய வலம்புரியில் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் வெளியான செய்தி குறித்து, மேற்படி சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசன் மற்றும் பதில் பொது முகாமையாளர் ஆகியோரால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஆசிரியர், வலம்புரி பத்திரிகை, தங்கள் 12.09.2021 ஆம் திகதிய பத்திரிகையில் வெளிவந்த எமது சங்கம் பற்றிய விடயம் சம்பந்தமாக பின்வரும் விளக்கத்தை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

எமது சங்கத்தினால், கோவிட் - 19 ஆரம்பமாகிய காலம் தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான நிவாரணம் பிரதேச செயலக அறிவுறுத்தலுக்கமைவாக தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்றும் கிராம உத்தியோகத்தர்கள் மூலமும் வழங்கிவருகின்றோம்.

அந்தவகையில், கடந்த 31.08.2021 ஆம் திகதி பிரதேச செயலகத்துடன் கலந்துரையாடியதற்கு அமைவாகவும் அவர்களின் 31.08.2021 ஆம் திகதிய அறிவுறுத்தல் கடிதத்திற்கு அமைவாகவுமே பத்திரிகையில் குறிப்பிட்ட பொருட்களான மஞ்சள் பருப்பு, வெள்ளைச் சீனி போன்றவற்றை அன்றைய நாட்டு சூழ்நிலைக்கு அமைவாக கூடிய விலைக்குக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாகவே மஞ்சள் பருப்பு ரூபாய் 300 இற்கும் வெள்ளைச் சீனி ரூபாய் 200 இற்கும் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இக்காலப்பகுதியில் தனியார் கடைகளில் வெள்ளைச் சீனி கிலோ ரூபாய் 240 இற்கும் மஞ்சள் பருப்பு கிலோ ரூபாய் 320 இற்கும் விற்பனையாகிக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர, கடந்த 21.08.2021 ஆம் திகதி தொடக்கம் ஊரடங்கு காரணமாகவும் எமது சங்கத்தில் கோவிட் தொற்று ஏற்பட்டதன் காரணமாகவும் காரியாலயம் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக நிவாரணப் பணிகளை குறைந்த பணியாளர்கள் மூலமே நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருந்தது. இதனால்தான் நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது என்பதையும் தங்களுக்கு அறியத் தருகின்றோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# மோ. சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

## கோண்டாவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் டிப்போ பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கொழும்புத்துறை மணியம்தோட்டப் பகுதியைச் சேர்ந்த கெதர குணரட்ன (வயது - 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் பலாலிக்கு வேலைக்குச் சென்று மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தபோது கோண்டாவில் டிப்போ பகுதியில் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அன்றையதினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-03)

# அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் 10 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேற்கொண்ட பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது.

6 பொலிஸ் கான்ஸ்டபிள், 2 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் 2 பொலிஸ் சார்ஜன்ட் ஆகிய 10 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இவர்களில் சிலர், கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுமக்கள் தேவையற்று பொலிஸ் நிலையம் செல்வதைத் தவிர்த்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம-03)

# மோ. சைக்கிளிலிருந்து தவறி விழுந்த மூதாட்டி மரணம்

## மந்துவில் கிழக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறுதலாக கீழே விழுந்த மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை ஆசையம்மா (வயது - 80) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த மூதாட்டி கடந்த 9 ஆம் திகதி பேரனுடன் மோட்டார் சைக்கிளில் மந்துவில் பகுதியிலுள்ள தனது மகளின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது தவறுதலாக கீழே விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சைபலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-03)




# அரசின் இயலாமைக்கு மத்தியில் மக்களின் உயிரை பணயம் வைத்து தேர்தல் நடத்துவது கொடூரமானது

## சஜித்தின் மூளையை பரிசோதிக்க வேண்டும் - அநுரகுமார

(கொழும்பு)

அரசாங்கத்தின் இயலாமைக்கு மத்தியில் நாட்டு மக்களின் உயிர்களை பணயம் வைத்து தேர்தல் நடத்தக் கோருவது கொடூரமானது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் வைரஸ் தொற்று பரவி நாட்டு மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வரும் நிலையில் தேர்தல் ஒன்றை கோரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் மூளையை பரிசோதனை செய்து பார்க்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தேர்தல் ஒன்றை கோருவது மக்கள் தொடர்பில் சிந்தித்து அல்ல, மாறாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரண்டு கட்சிகளும் தங்களை தாங்களே குறை கூறிக்கொள்வது வழமை.

கடந்த முறை 100 கோவிட் தொற்றாளர்களும் சில மரணங்களும் பதிவான போது தேர்தல் பிற்போடப்பட்டது. ஆனால் தற்போது ஆயிரக்கணக்கில் தொற்றாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கில் மரணங்கள் பதிவாகின்றபோது தேர்தல் நடத்தக் கோரும் நபரின் மூளை கட்டாயம் பரிசோதனை செய்யப்பட வேண்டியது என்று அநுரகுமார திஸாநாயக்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

# கொட்டடியில் மயங்கி விழுந்து மரணமான பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் கோவில் வாசலில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை - நெடியகாடு பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான ஸ்ரீராஜேந்திரன் சந்திரவதனா (வயது-68) என்பவர் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் கொட்டடி ஆலயம் ஒன்றுக்கு வருகை தந்திருந்தார்.

ஆலய வாசலில் நின்றிருந்தபோது திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்திருந்தார். அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-03)

# தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் இறப்பதற்கான வாய்ப்புக்கள் 11 மடங்கு அதிகம்

## அமெரிக்க ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**தடுப்பூசிஏற்றியவர்களை விட தடுப்பூசிஏற்றாதவர்கள் 11 மடங்கு அதிகமாக கொரோனாவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கும் இறப்பதற்கும் வாய்ப்புள்ளதாக சிடிசி நிலையப் பணிப்பாளர் ரோஷெல் வாலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.**

கடுமையான நோய் அல்லது இறப்புக்கு எதிராக கொவிட் -19 தடுப்பூசிகளின் செயற்திறனை தெளிவாகக் காட்டும் ஒரு புதிய ஆய்வை அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிலையம் வெளியிட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கும் மேலாக கொரோனா தொற்றினால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களை ஆய்வு செய்ததில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

டெல்டா வைரஸ் நாடு முழுவதும் பரவி வருகிறது.

கோடை காலப்பகுதியில் அமெரிக்காவில் டெல்டா பரவலாக இருந்ததால்,

ஆரம்ப நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவது சற்று வீழ்ச்சியடைந்ததென்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால் தடுப்பூசிஏற்றலின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது மற்றும் இறப்பு என்பன சரிவையும் காட்டியதாக வோஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

தடுப்பூசிஏற்றியவர்களுக்க நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்து வைரஸ் தொற்றும் வீதமும் குறைகின்றது.

பல ஆய்வுகள் தடுப்பூசி ஏற்றலினால் செயல்திறன் அதிகரிப்பதை உறுதிப்படுத்தியுள்ளன. (நி-5)

## அகற்றப்பட்ட பிள்ளையார் சிலையை மீண்டும் வைக்க நடவடிக்கை

(மன்னார்)

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மடு - பரப்புக்கடந்தான் வீதியில் மரத்தின் கீழ் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் சிறிய கோயில் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த நிலையில் முதல் கட்டமாக மூலஸ்தானம் அமைக்கப்பட்டு அதற்கு தற்காலிகமாக பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்த, நிலையில் குறித்த பகுதியில் உள்ள பிள்ளையார் சிலையை சில விசமிகள் அகற்றிவிட்டு அந்தோனியார் சிலை வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்து மக்கள் மற்றும் இந்துக் குருக்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல், மடு பொலிஸார் மற்றும் மடு பிரதேச செயலாளர் ஆகியோர் நேற்றுக் காலை குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, புதிதாக வைக்கப்பட்ட அந்தோனியார் சிலை அகற்றப்பட்டு மடு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

மேலும் அவ்விடத்தில் இருந்த பிள்ளையார் சிலையை மீண்டும் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தோடு, குறித்த சம்பவம் தொடர்பாக மடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (7-4-6-285)

## மக்களின் வருமானத்தில் 5 வீதத்தை வரியாக அறவிட திட்டம்?

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று நெருக்கடிக்கு மத்தியில் கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.**

**இந்நிலையில் பொது சேவைகளை நடத்தி செல்ல பொது மக்களின் மாதாந்த வருமானத்தில் 5 வீதம் வரி அறவிட வேண்டும் என வர்த்தக அமைச்சர் பேராசிரியர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**



**ஒரு இலட்சத்திற்கு அதிக மாதாந்த சம்பளம் பெறும் அனைவருக்கும் இந்த வரி விதிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

**ஊடக நிகழ்வு ஒன்றில் இணைந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

**கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற சமூக நலத்துறைகளின் பராமரிப்புக்கான குறைந்த பட்ச 'சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு' எனக் கூறிநூற்றுக்கு 5 வீதம் வரி விதிக்க வேண்டும்.**

**வருமான மட்டத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் சராசரியாக ஒரு இலட்சத்திற்கு மேல் மாத வருமானம் உள்ள அனைவரிடமிருக்கும் இந்த வரி விதிக்கப்பட வேண்டும்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதிகோரி பிரதமரின் விஜயத்தின் போது இத்தாலியில் ஆர்ப்பாட்டம்







(கொழும்பு)

**பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை குழுவினரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து இத்தாலியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பல போராட்டங்கள் நடத்தப்பட்டன.**

**இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி-20 சர்வமதமாநாட்டின் உரையாற்ற பிரதமர் தலைமையிலான குழுவினர்சென்றநிலையிலேயே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.**

**2019-இல்இடம்பெற்றஉயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (நி-5)**

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்; மெட்வேடவ் சம்பியன்



## ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ், உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், யாரும் எதிர்பாராத வகையில் சிறப்பாக விளையாடிய ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ், 6-4, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

இது டேனில் மெட்வேடவ்வின் முதல் கிராண்ட் ஸ்லாம் சம்பியன் பட்டம் ஆகும்.

அத்துடன் கடந்த 2005ஆம் ஆண்டுக்கு பின்பு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ரஷ்யர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். (4-6)

# கப்டன் பதவியில் மாற்றம்?



இருபது-20 உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் இந்திய அணிக்கு ரோகித் சர்மா கப்டனாக நியமிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி விராட் கோலியே இருபது-20 கிரிக்கெட் அணி கப்டன் பதவியிலிருந்து விலகுவார் என்று ஒரு தரப்பும், அப்படி இல்லாவிட்டாலும் ரோகித் சர்மாவே கப்டனாக நியமிக்கப் படலாம் என்றும் கூறப்படுகிறது.

காரணம் ரோகித் சர்மாவின் ஐபிஎல் வெற்றிகள் மற்றும் இந்திய இருபது-20 அணிக்காக கோலி இல்லாத போது ரோகித் சர்மா பிரமாதமாக சிலபல வெற்றிகளைப் பெற்று தந்துள்ளார்,

மேலும் கோலி தன் பட்டிங்கில் கவனம் செலுத்தப் போவதாகவும் அதற்கு கப்டன் சுமை இடையூறாக இருப்பதாகவும் கருதுவதாக சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை தோல்வி

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 18.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனைத்தொடர்ந்து 104 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 14.1 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக 21 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்திய ஹெய்டன் மார்க்ரம் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# அரகோன் கிராண்ட் பிரிக்ஸ் பிரான் செஸ்கோ முதலிடம்

மோட்டோ ஜிபி தொடரின் அரகோன் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், டுக்கார்டி அணியின் பிரான்செஸ்கோ பாக்னியா முதலிடம் பிடித்துள்ளார்.

இளசுகளின் விருப்ப விளையாட்டாக ரசிக்கப்படும் மோட்டோ ஜிபி பந்தயம், ஆண்டுக்கு 19 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறும்.

அந்த வகையில் ஆண்டின் 13ஆவது சுற்றான அரகோன் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம், நேற்று சியுடாட் டெல் மோட்டார்டி அரகோன் சர்வதேச ஓடு தளத்தில் நடைபெற்றது.

இதில் பந்தயதூரத்தை நோக்கி, 21 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறிப்பாய்ந்தனர்.

இதில், டுக்கார்டி அணியின் பிரான்செஸ்கோ பாக்னியா பந்தய தூரத்தை 41 நிமிடங்கள், 44.422 விநாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்தார்.

அத்தோடு முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

14 ஆவது சுற்றான சேன் மெரினோ அண்ட் ரிம்மிஸ் கோஸ்ட் ஜிபி, எதிர்வரும் 19ஆம் திகதி மிஸானோ சர்வதேச ஓடு தளத்தில் நடைபெறவுள்ளது. (4-6)




# இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ்; டேனில் ரிச்சியார்டோ முதலிடம்

பார்முலா-1 கார்பந்தயத்தின் இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெக்லரன் அணியின் டேனியல் ரிச்சியார்டோ முதலிடம் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'பார்முலா 1' கார் பந்தயம், 23 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் 14ஆவது சுற்றான இத்தாலியன் கிராண்ட் பிரிக்ஸ், நேற்று மோன்ஸா சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 306.72 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் மெக்லரன் அணியின் டேனியல் ரிச்சியார்டோ, பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 21 நிமிடங்கள் 54.365 விநாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 27 புள்ளிகள் வழங்கப்பட்டன.

அவரை விட 1.747 விநாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, மெக்லரன் அணியின் லெண்டோ நோரிஸ், இரண்டாவது இடத்தை பெற்றார். அத்தோடு அவர், இரண்டாம் இடத்திற்கான 18 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்.

4.921 விநாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வால்டெரி போட்டாஸ், மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 18 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள பதினொன்று சுற்றுகளின் முடிவில், ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன் ஏழு வெற்றிகளுடன் 226.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.




அடுத்த பதினைந்தாவது சுற்றான ரஷ்யன் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 26 ஆம் திகதி சோச்சி சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது. (4-6)

# இராசிபலன்

**14.09.2021**
ஆவணி 29, செவ்வாய்க்கிழமை
அட்டமி பிற்பகல் 3.16 மணிவரை
கேட்டை முற்பகல் 9.55 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.05-4.33 மணிவரை
சந்திராஷ்டமம்: கார்த்திகை,
ஆவணி மூலம் வள்ளவன்


மேஷம்


அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசியைப் பெறுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், அல்லல்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


மிதுனம்

ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பல நாட்களாக செய்ய நினைத்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியமான நாள்.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.


கன்னி

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.


துலாம்

சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

எடுத்த காரியங்களில் வெற்றி காண அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


தனுசு

சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.


மீனம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் அழைப்புக்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் மத்தியில் உங்கள் மதிப்பு உயரும்.

ஆசைப்படு, ஆனால் ஆசைக்கு அடிமையாகி விடாதே

## நாளை முதல்

# சோதனைச் சாவடிகளில் தடுப்பூசி

# சான்றிதழ்களை பரிசோதிக்க நடவடிக்கை

## மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(மன்னார்)

**மன்னாரில் உள்ள சோதனைச் சாவடிகளில் நாளை கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்ட அட்டையினை பரிசோதிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் வேலைத் திட்டம் முடிவுக்கு வருகின்ற நிலையில் உள்ளது. இதன் அடிப்படையில் முதலாவது தடுப்பூசியை 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் 80 சதவீதமாகவும், 2 ஆவது தடுப்பூசியை 68 சதவீதமானவர்களும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் முதல் தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் கடமையாற்றுகின்ற 29 மற்றும் 30 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் முழுமையாக 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளது.

கடந்த இரு நாட்களில் மன்னார் மாவட்டத்தில் 101 பேர் கொரோனாத் தொற்றுடன் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 66 பேர் நிலக்கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் பணியாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரையில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் 23 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் கடைசியாக நேற்று ஞாயிற்றுக்கிழமை 63 வயதுடைய ஆண் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 30 வயதிற்கு மேற்பட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத அனைவருக்கும் நேற்றும் இன்றும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று புதுக்குடியிருப்பு முஸ்லீம் மகா வித்தியாலயத்திலும் நாளை கட்டையடம்பன் மகா வித்தியாலயத்திலும் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத 30 வயதிற்கு மேற்பட்ட சகலரும், உடனடியாக அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரியை நாடி இன்றும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-4-6-285)

# வவுனியாவில் கொவிட் தொற்றினால் இதுவரை 139 பேர் உயிரிழப்பு

## வவு.மாவட்ட அரசாங்க அதிபர்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 139 பேர் கொவிட் தொற்று காரணமாக மரணித்துள்ளதுடன், 6ஆயிரத்து 780 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் கொவிட் நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் பீ.ஏ. சரத்சந்திர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாவட்ட கொவிட் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய நிலவரத்தின் படி எமது மாவட்டத்தில் 6 ஆயிரத்து 780 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரைக்கும் 139 பேர் கொவிட் தொற்றால் மரணித்துள்ளனர். 973 கொவிட் தொற்றாளர்கள் கொவிட் நிலையங்களில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

வீடுகளில் 1,194 தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 49 கொவிட் தொற்றாளர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மாவட்டத்தின் கொவிட் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான துரித செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-4-6-250)

# வவுனியாவில் 60 வயதிற்கு மேற்பட்ட 62 வீதமானோருக்கு இரண்டாவது டோஸ்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் 62 வீதமானவர்களுக்கும், 30 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட 27 வீதமானவர்களுக்கும் இரண்டாவது டோஸ் கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் 30 வயது தொடக்கம் 59 வயதிற்கு இடைப்பட்ட 72 ஆயிரத்து 210 பேர் இருக்கிறார்கள். அதில் முதலாவது டோஸ் கொவிட் தடுப்பூசி 69 வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டோஸ் தடுப்பூசி தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இதில் 27 வீதமானவர்கள் இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுள்ளார்கள்.

மேலும், கிராம உத்தியோகத்தர் ஊடாக தடுப்பூசி செலுத்தப்படும் விபரங்களைப் பெற்று உரிய இடங்களில் 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டு கொவிட் அச்சுறுத்தலில் இருந்து விடுபட முன்வர வேண்டும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (7-4-250)

# வடக்கில் ஒரு லட்சம் பேர் தடுப்பூசி பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தின் 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏறத்தாழ 100,000 பேர் இதுவரை எந்தவொரு தடுப்பூசியும் பெற்றுக்கொள்ளவில்லை என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதுவரை வடமாகாணத்தில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் 5 இலட்சத்து 47 ஆயிரத்து 150 பேருக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இது வடமாகாணத்தில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் 85வீதம் ஆகும். மேலும் 2 ஆவது தடுப்பூசி 4 இலட்சத்து ஆயிரத்து 494 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் 62வீதம் ஆகும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதி முதல் வடமாகாணத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புக்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தில் இதுவரை மொத்தமாக 32 ஆயிரத்து 844 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்களில் 14 ஆயிரத்து 480 தொற்றாளர்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்திலும் 5 ஆயிரத்து 847 தொற்றாளர்கள் செப்டெம்பர் மாதத்தின் முதல் 12 நாட்களிலும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேபோல வடமாகாணத்தில் கொவிட் தொற்று காரணமாக இதுவரை மொத்தமாக 578 இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 228 இறப்புக்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்திலும் 169 இறப்புக்கள் செப்டெம்பர் மாதத்தின் முதல் 12 நாட்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள இறப்புக்களை ஆராயும் போது பெரும்பாலான இறப்புக்கள் தடுப்பூசி எதுவும் போடாதவர்கள் மத்தியிலேயே ஏற்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்வதன் மூலம் கொவிட் தொற்று ஏற்பட்டாலும் அதன் தாக்கத்தையும் இறப்புக்களையும் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

எனவே தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் அனைவரையும் உடனடியாக சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டது. (4-7-33)




## யாழ்.பல்கலை மருத்துவ பீடத்திற்கு புதிய பீடாதிபதி தெரிவு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக வைத்தியக் கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ பீடத்தின் தற்போதைய பீடாதிபதியும் சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் எஸ்.ரவிராஜின் பதவிக் காலம் நிறைவு பெற்றதையடுத்து புதிய பீடாதிக்கான தேர்தல் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. மருத்து பீட, பீடச்சபை உறுப்பினர்களுக் கிடையிலே இடம்பெற்ற வாக்கெடுப்பில் வைத்தியக் கலாநிதி இ. சுரேந்திரகுமாரன் 22 வாக்குகளைப் பெற்று 4 வாக்குகளால் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கொவிட் 19 தடுப்புச் செயலணியின் இணைப்பாளராகப் பதவி வகிக்கும் வைத்தியக் கலாநிதி இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீட சமுதாய மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார்.

இவர் சமுதாய மருத்துவத் துறையின் தலைவராக 2012 முதல் 2019 வரை பதவி வகித்துள்ளார். (4-7-33)

## கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிதலைமை பொலிஸ் பரிசோதகர் பிவீரசிங்க உடன் நடைமுறைக்கு வரும் வகையில் களனி பொலிஸ் பிராந்தியத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அவர் மீது தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த முறைப்பாடுகளை அடுத்து இந்த இடமாற்றம் பொலிஸ் உயர் மட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது. களனி பொலிஸ் பிராந்தியத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவி நிலையிலிருந்து தரமிறக்கப்பட்டு சுப்பர் நியூமரரி நிலை (Supernumerary position) என்ற வகையில் இடமாற்றப்பட்டுள்ளார். (4-7-33)

## கொக்குவில் இந்து மயானத்தில் மின் தகன மேடை

### நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து மயானத்தில் மின் தகன மேடை அமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கொக்குவில் இந்து மயானத்தில் மின் தகன மேடை அமைத்து தருமாறு, கொக்குவில் இந்து மயான அபிவிருத்தி சபையினால் நல்லூர் பிரதேச சபையிடம் கோரப்பட்டது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினம் நல்லூர் பிரதேச சபையில் தவிசாளர் மயூரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலைகளில் கொவிட் சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

இந்நிலையில் நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட கொக்குவில் இந்து மயானத்தில் புதிதாக மின் தகன மேடை அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7-33)

## பாவனையாளர் அதிகார சபையின் செயற்பாடுகள் வினைத்திறனாக முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அதிகார சபையினுடைய செயற்பாடுகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் வினைத்திறனாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுவது குறித்தும் அவர்களுடைய குறைகளை அறிந்து கொள்வது குறித்தும் கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் போன்றவை இங்கு சுட்டிக்காட்டப்பட்டதுடன் இதனுடன் தொடர்புடைய அமைச்சுடன் கலந்துரையாடி அதனை நீக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகளை புறநகர், கிராமமென மாவட்டம் முழுவதும் முன்னெடுப்பதற்கும் இதன் போது கோரப்பட்டது. பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் அண்மைய சுற்றிவளைப்புக்களில் அதிக விலைக்கு விற்பனை செய்தமை தொடர்பாக 80றிற்கு மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (4-7-33)

## யாழ். நகரில் குழந்தையுடன் யாசகம் பெற்றுவந்த பெண் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் குழந்தையுடன் யாசகம் பெற்று வந்த பெண், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். நகரின் மத்திய பகுதி மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் பெண்ணொருவர் குழந்தையுடன் யாசகம் பெற்று வந்துள்ளார்.

சில வேளைகளில் அவருடன் ஒரு ஆணும் இணைந்து மூவருமாக வீதியில் செல்வோரிடம் பண உதவிகளை பெற்று வந்துள்ளனர்.

குறித்த இருவரும் இவ்வாறாக பல வாரங்களாக உதவிகளை பெற்று வந்த நிலையில் அது தொடர்பில் யாழ்ப்பாண பிரதேச செயலரின் கவனத்திற்கு சிலர்கொண்டு சென்றதை அடுத்து அவர் அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவித்தார்.

அதன் பிரகாரம் நேற்று அப்பெண், தட்டாதெரு சந்தியை அண்மித்த பகுதியில் குழந்தையுடன் நின்றிருந்த வேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில், அவர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் எனவும், அவர்கள் அங்கிருந்து குடும்பமாக வந்து மணியந்தோட்டம் பகுதியில் தங்கி இருக்கின்றனர்.

தினமும் மணியந்தோட்டம் பகுதியில் இருந்து முச்சக்கர வண்டியில் யாழ்.நகர் மற்றும் நகரை அண்டிய பகுதியில் குழந்தையுடன் வந்திறங்கி, வீதியில் செல்வோரிடம் பண உதவிகளை பெற்று வந்துள்ளனர் என்பதனை பொலிஸார் அறிந்து கொண்டனர்.

அதனை அடுத்து கடுமையாக அவர்களை எச்சரித்த பொலிஸார் அவர்களை தமது சொந்த இடங்களுக்கு செல்லுமாறு பணித்தனர். (4-7-33)

# வேகமாகப் பரவும் 'கறுப்பு பூஞ்சை'

## ஒரே முகக்கவசத்தை நீண்ட நேரம் அணிவதும் இதற்கு காரணம் என்கின்றனர் மருத்துவர்கள்

(கொழும்பு)

**நாட்டில் இதுவரை "கறுப்பு பூஞ்சை" தொற்றுக்கு உள்ளான பல நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

இந்த கறுப்புப் பூஞ்சை நோய்க்கும், கொரோனா வைரஸ் தொற்றுக்கும் நேரடி விளைவு இல்லை என்றாலும், நீண்ட நேரம் முகக்கவசங்களை அணிவதால் கறுப்பு பூஞ்சை நோய் பரவும் அபாயம் இருப்பதாக மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த நிலையில் கறுப்புப் பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நோயாளிக்கு மூக்கின் உட்புறத்திலும், ஒரு கண்ணிலும் கறுப்புப் பூஞ்சை தொற்று ஏற்பட்டுள்ளது.

அந்நபர் முன்பு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு குணமடைந்துள்ளார். இது போன்ற பல நோயாளிகள் சிகிச்சை பெற்றிருப்பது ஆய்வில் தெரிய வந்தது.

ஒரே முகக்கவசத்தை மற்றும் அழுக்கு முகக்கவசத்தை நீண்ட நேரம் அணிந்திருப்பது கறுப்பு பூஞ்சை தொற்று ஏற்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

# சீனாவின் அறிவியல் விருதை பெறுகிறார் இலங்கை பேராசிரியர் மலிக் பீரிஸ்



(கொழும்பு)

ஹொங்கொங்கின் சிறந்த தொற்று நோய் நிபுணர்களுள் ஒருவரான பேராசிரியர் யுவன் க்வோக்-யுங் உடன் இணைந்து சீனாவின் 2021 ஆம் ஆண்டிற்கான எதிர்கால அறி வியல் விருதை மலிக் பீரிஸ் ஒரு மில்லியன் அமெரிக்க டொலருடன் பெறவுள்ளார்.

சார்ஸ் மற்றும் கொவிட் - 19 போன்ற வளர்ந்து வரும் நோய்களைப் புரிந்து கொள்வதில் அவர்களின் பங்களிப்பு மற்றும் ஆய்வுக்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இந்த விருது வழங்கும் விழா நவம்பர் 21 ஆம் திகதி பீஜிங்கில் நடைபெறும். சீனாவில் அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக எதிர்கால அறிவியல் பரிசு 2016 இல் தனியார் நிதியால் நிறுவப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் மலிக் பீரிஸ் ஒரு நோயியல் நிபுணர் மற்றும் வைராலஜிஸ்ட் ஆவார். அவரது ஆராய்ச்சி ஆர்வங்களில் சுற்றுச்சூழல், பரிணாமம், நோய்க்கிருமி உருவாக்கம், விலங்கு-மனித இன்ப்ளூவென்ஸா மற்றும் பிற மனித சுவாச வைரஸ் தொற்றுகள், 320 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் உள்ளன. (நி-5)

# கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 1483 பேர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 1483 பேர் குணமடைந்து நேற்று திங்கட்கிழமை வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

இதனையடுத்து, இது வரை நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 14 ஆயிரத்து 295 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இது வரையில் 4 இலட்சத்து 85 ஆயிரத்து 922 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 296 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.திரு. யோசேப் மரிசிலின்

பிறப்பு 1945 05 04

இறப்பு 2021 08 15



கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் யோசேப் மரிசிலின் அவர்களின் 31 ஆம் நாளை நினைவுகூருகின்றேன்.

ஒன்றாய் இருந்து அன்பாய்
இன்பமாய் பேசும் நீர் இப்போது
இல்லை என்பதை மனம் ஏற்க மறுக்கிறது

(C-2548)

சி.ஜெயக்கொடி கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.


# பதவியை துறந்தார் கப்ரால்; இராஜினாமா கடிதம் கையளிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பதவியை ஏற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமா செய்துள்ளார்.

அதற்கான கடிதத்தை நேற்று திங்கட்கிழமை காலை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கப்ரால் கையளித்தார். (நி-5)

# கல்வித்துறையின் பாதிப்பை சீர்செய்ய அரசுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

**சுசில் பிரேம ஜயந்த**

(கொழும்பு)

கல்வித்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை குறுகிய காலத்துக்குள் சீர்செய்வதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்றிட்டத்துக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தொலைநோக்கு கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடு தழுவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய திறக்க முடியுமா? என்பது குறித்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக கல்வித் துறையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்களின் கற்றல் நிலை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இணையவழி முறைமை ஊடாக ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஆசிரியர்-அதிபர் சேவையில் நிலவும் வேதன பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொள்ளும் வரை ஒன்லைன் முறைமை ஊடான கற்பித்தலில் ஈடுபட போவதில்லை என ஆசிரியர்கள் உறுதியாகவுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் மாணவர்களின் கல்வி நிலையை கருத்திற்கொண்டு தொலை நோக்கு முறைமை ஊடாக கற்றல் நிகழ்ச்சிகள் அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அத்துடன் இவ்வருடம் நடைபெறவுள்ள தேசிய பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்காக விசேட கற்பித்தல் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)


2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். ஆறுமுகம் இராமச்சந்திரன்

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்)

தோற்றம் 26.03.1953 திதி 14.09.2021 சிவபதம் 06.09.2019

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண்மூடி முழிக்குமுன்னே எம்மை
கடந்து விட்டீர்கள்
என்றென்றும் எங்களுடன்
இணைந்திருப்பீர்கள்
என எண்ணிக் கனவுகள் கண்டிருந்தோம்
இடை நடுவில் எம்மைத் தவிக்கவிட்டு
ஏன் மறைந்து விட்டீர்கள்!



"மாதுமை"
மருதனார்மடம், இணுவில்.

குடும்பத்தினர்.

# இலங்கைத் தமிழர்களை தமிழக அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும்

## செல்வம் எம்.பி



(நெளுக்குளம்)

**"திருச்சி சிறப்பு முகாமில் நடைபெறும் இலங்கை தமிழர்களின் போராட்டம் அவர்கள் அனைவரும் உயிர் விடும் நிலைக்கு சென்றுள்ளது" என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தம்மை விடுவிக்க கோரி நடத்தி வரும் போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் கருத்து கூறுகையில், "அவர்களின் போராட்டம் தொடர்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது . அந்த கடிதத்தில் - அவர்கள் அனைவரும் துரிதமாக விடுதலை செய்யப்பட வேண்டும், நீதிமன்றத்தில் எந்தவித வழக்குகளும் இல்லாதவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். வழக்கு உள்ளவர்களின் வழக்குகள் அனைத் திற்கும் அவர்கள் தீர்ப்பை பெறும் காலம் உடனடியாக துரிதப்படுத்தப்பட வேண்டும்.

அத்தோடு குறிப்பிட்ட சிலர் இலங்கையில் இருந்து எல்லை தெரியாமல் இந்தியக் கடல் எல்லைக்குள் சென்றவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்தவகையில் ஏனையவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் அந்த நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப்போராட்டத்தில் அவர்களுடைய கோரிக்கைகளை மனதில் கொண்டு செயற்பட்டு, அவர்களை அவர்களது குடும்பங்களுடன் இணைக்க அரசு முன்வர வேண்டும். அதே வேளை சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை யாரும் செய்யக்கூடாது, இனிவரும் காலங்களில் இந்திய சட்டங்களுக்கு புறம்பான செயல்களில் ஈடுபடுவதை அனைவரும் தவிர்க்க வேண்டும்.

மேலும் திருச்சி சிறப்பு முகாமில் இருப்பவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாகவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கின்றோம்" என்றார். (7-4-6-299)

# கொக்குத் தொடுவாய், பூமடுகண்டல் பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்களால் நில அபகரிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட, கொக்குத்தொடுவாய் பூமடுகண்டல் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களை, வெலி ஓயா பகுதியிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொக்குத் தொடுவாய் பகுதியைச்சேர்ந்த தமிழ் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு மீள் குடியமர்த்தப்பட்ட பிற்பாடு பூமடுகண்டல் பகுதியில் 138ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களில் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருந்தனர்.

இந் நிலையில் தற்போது அப்பகுதியில் பெரும்போக மானாவாரி நெற்பயிற்செய்கைக்கான ஆயத்தப்பணிகளில், வயல் நிலங்களுக்குரிய தமிழ் மக்கள் ஈடுபடும்போது, வெலிஓயா பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் அதற்கு இடையூறு விளைவித்ததுடன், குறித்த விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முனைப்புக்களில் ஈடுபட்டிருந்தனர். இந் நிலையில் இது தொடர்பில் அப்பகுதித் தமிழ்மக்கள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரிடம் முறையிட்டிருந்தனர்.

அதற்கமைய நேற்று முன்தினம் குறித்த பகுதிக்குச்சென்ற முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் மற்றும், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நிலைமைகளை ஆராய்ந்தனர். அப்போது அங்கு பெரும்பான்மை இனத்தவர்கள் பலர் தமிழ் மக்களின் குறித்த பூர்வீக வயல்நிலங்களை அபகரிக்கும் முயற்சியில் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு அபகரிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மை இனத்தவர்களுக்கும், அங்கு சென்ற தமிழ்மக்கள் பிரதி நிதிகள் மற்றும் தமிழ் மக்களுக்கிடையில் வாய்த்தர்க்கங்கள் இடம்பெற்றதுடன், அபகரிப்பு முயற்சியும் தடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையைச்சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் வருகை தந்திருந்தார். குறித்த உத்தியோகத்தருக்கும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. இவ்வாறு இடம்பெற்றகலந்துரையாடலை அடுத்து, பிறிதொரு நாளில் மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் தலைமையில் குறித்த காணிப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வது என்ற முடிவு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-281)



கிளிநொச்சி மற்றும் பரந்தன் ஆகிய நகரப்பகுதிகளில் வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் வசித்து வரும் ஆதரவற்றோருக்கு ஊரடங்கு காலத்தில் உணவளிக்கும் செயற்பாடு கிளிநொச்சி ஊடகவியலாளர்களினால் முன்னெடுக்கப்படுகிறது. (படம் : யதுபாஸ்கரன்)



வவுனியா வைத்தியசாலைக்கு நோயாளர்களுக்கான வசதிகளுடன் கூடிய 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 3 கட்டில்கள் லாவண்யா நகையக உரிமையாளரினால் அண்மையில் வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதிராகுலன், வைத்தியர் மதுரகன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. (படம்: வசந்தரூபன்)

# 42 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்ப்பட்ட கல்மடுநகர் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் சிறப்பு அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய கசிப்பு உற்பத்தி செய்யுமிடத்தினை சுற்றிவளைத்த சிறப்பு அதிரடி படையினர் 42 லீற்றர் கசிப்புடன் உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபர் மற்றும் தடையப்பொருட்களை தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் சந்தேக நபரினை விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர் என தெரிவித்தனர். (7-4-6-316)

# வெளிநாடு



## ஆப்கான் ஜனாதிபதி மாளிகையில் கொடியேற்றிய தலிபான்கள்

(காபூல்)

**அமெரிக்காவும் உலக நாடுகளும் செப். 11 தாக்குதல் தினத்தைக் நினைவு கூர்ந்த நிலையில், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி மாளிகையில் தங்களது கொடியை தலிபான்கள் ஏற்றினர்.**

காபுலில் கடந்த சனிக்கிழமை எளிமையாக நடைபெற்ற நிகழ்ச்சியில், இடைக்கால அரசின் பிரதமர் முல்லா முகமது ஹசன் அகுண்ட் அந்தக் கொடியை ஏற்றிவைத்ததாக தலிபான் கலாசார பிரிவுத் தலைவர் அகமதுல்லா முத்தாக்கி தெரிவித்தார்.



இந்தக் கொடியேற்றத்தின் மூலம் புதிய அரசின் அதிகாரபூர்வ பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (7-4)

## 1,500 கி.மீ பயணிக்கக்கூடிய ஏவுகணையை சோதித்தது வடகொரியா

(பியொங்யாங்)

வடகொரியா கடந்த வார இறுதி நாட்களில் நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய ஒரு புதிய வகை ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்து பார்த்துள்ளதாக கொரிய மத்திய செய்தி நிறுவனத்தை (KCNA) மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

'குரூஸ்' என பெயரிடப்பட்ட இந்த ஏவுகணை அதன் இலக்கை எட்டுவதற்கு முன்பு சுமார் 1,500 கிலோமீற்றர் (930 மைல்) தூரம் பறந்து சென்றதாகக் கூறப்படுகிறது.

குரூஸ் ஏவுகணையின் சோதனை "நமது அரசின் பாதுகாப்பை மிகவும் நம்பகத்தன்மையுடன் உறுதிப்படுத்துவதற்கும், எதிரிப் படைகளின் இராணுவ சூழ்ச்சிகளை வலுவாகக் கொண்டிருப்பதற்கும் மற்றொரு பயனுள்ள தடுப்பு வழிமுறைகளை வைத்திருப்பதற்கான மூலோபாய முக்கியத்துவத்தை வழங்குகிறது" என்று கொரிய மத்திய செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

எனினும் இந்த சோதனை வட கொரியாவின் "இராணுவத் திட்டத்தை வளர்ப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்துவது மற்றும் அதன் அண்டை நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஏற்படும் அச்சுறுத் தல்களை வெளிக்காட்டுகிறது" என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (7-4)

## பெண்களின் கல்விக்கான புதிய கட்டுப்பாடுகள்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்விக்கான புதிய கட்டுப்பாடுகளை தலிபானின் கல்வி அமைச்சர் அப்துல் பாக்கி ஹக்கானி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை செய்தியாளர் சந்திப்பில் அறிவித்தார்.

பெண்கள் முதுகலை பட்டப்படிப்பு உட்பட பல்கலைக் கழகங்களில் தொடர்ந்து படிக்கலாம், ஆனால் வகுப்பறைகள் பாலினமாக பிரிக்கப்பட்டு தலையினை மறைக்கும் வகையிலான ஹிஜாப்கள் கட்டாயமாக்கப்படும். பெண் மாணவர்களுக்கு பெண் ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். அதற்காக எங்களிடம் அதிக எண்ணிக்கையிலான பெண் ஆசிரியர்கள் உள்ளனர். இதில் நாங்கள் எந்த சிக்கல்களையும் எதிர்கொள்ள மாட்டோம் என்று கூறினார்.

1996 மற்றும் 2001 க்கு இடையில் தலிபான் ஆட்சியின் கீழ் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் பெண்கள் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

## கனடா பெடரல் தேர்தல் முன்கூட்டியே வாக்களிக்க அனுமதி

### முதல் நாளில் 1.3 மில். வாக்குகள் பதிவு

(டொரன்டோ)

கனடாவில் பெடரல் தேர்தல் செப்டம்பர் 20ஆம் திகதி முன்னெடுக்கப்படஇருக்கும் நிலையில் மக்கள் முன்கூட்டியே வாக்களித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட்ட இந்த சிறப்பு வசதியினூடாக முதல் நாளில் மொத்தம் 1.3 மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் இந்த முன்கூட்டியே வாக்களிக்கும் வசதியானது திங்கட்கிழமை இரவு 9 மணி வரை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றே தெரிய வந்துள்ளது.

2019 பெடரல் தேர்தல் வாக்குப்பதிவை ஒப்பிடுகையில், இந்த முறை முன்கூட்டியே வாக்களிக்கும் வசதியை முதல் நாளில் பயன்படுத்தியவர்கள் எண்ணிக்கை சிறிது அதிகரித்துள்ளதாகவே தெரிய வந்துள்ளது.

கனேடியர்கள் சிறப்பு அனுமதி பெற்று வார நாட்களிலும் வாக்களிக்கலாம். இந்த சிறப்பு வாக்களிப்புக்கு செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி வரையில் அனுமதி உண்டு.

மட்டுமின்றிஅஞ்சல் மூலம் வாக்களிக்க பதிவு செய்வதற்கான காலக்கெடுவும் இது வாகும்.இதன் பின்னர், செப்டெம்பர் 20 ஆம் திகதிமுன்னெடுக்கப்படும் வாக்குப்பதிவில் மட்டுமே பங்கேற்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (7-4)

### பிரித்தானியாவில்

## முடிவுக்கு வரும் முடியாட்சி ஹிலாரி மாண்டெல் கணிப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் அடுத்த இரு தலைமுறையுடன் முடியாட்சி முடிவுக்கு வரும் எனவும், குட்டி இளவரசர் ஜோர்ஜ் ஒருபோதும் மன்னராக வாய்ப்பில்லை எனவும் கணிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

பிரித்தானிய முடியாட்சி தொடர்பான கருத்தை பிரபல நாவலாசிரியர் ஹிலாரி மாண்டெல் கணித்துள்ளார். பிரித்தானிய முடியாட்சி என்பது தற்போதைய சூழலில்,



இளவரசர் சார்லஸ் மற்றும் இளவரசர் வில்லியம் ஆகியோர்களுடன் முடிவுக்கு வரும் என்றே அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், நவீனமயமாக்கல் காரணமாக பிரித்தானிய முடியாட்சி இன்னும் இரண்டு தலைமுறைகள் மட்டுமே நீடிக்கும் எனவும், தற்போது 39 வயதாகும் இளவரசர் வில்லியம் இங்கிலாந்தின் கடைசி அரசராக இருப்பார் எனவும் அவர் கணித்துள்ளார். முன்னதாக இளவரசர் வில்லியத்தின் காதல் மனைவி கேட் மிடில்டனை, தனித்துவம் ஏதுமற்ற வெறும் ஒரு நெகிழி பொம்மையாகவே பார்க்கிறேன் எனக் கூறியிருந்தார் நாவலாசிரியர் ஹிலாரி மாண்டெல்.

ஆனால், ராணியார் மற்றும் இளவரசர் சார்லஸ் தொடர்பில் உன்னதமான நபர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார் ஹிலாரி மாண்டெல். (7-4)

## எவகிறீனை தொடர்ந்து கிரிஸ்டல்



(கெய்ரோ)

எவகிறீன் கப்பலை தொடர்ந்து 43,000 டன் எடையுள்ள கோரல் கிரிஸ்டல் என்னும் சரக்கு கப்பல் எகிப்து நாட்டின் சூயஸ் கால்வாயில் மீண்டும் சிக்கிக்கொண்டுள்ளது. இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. கப்பலை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. (7-4)

# மன்னம்பிட்டி தமிழ்க்கிராமத்
# மொழிச் செப்புப் பட்ட

மன்னம்பிட்டிப் பிரதேசம் என்பது பொலநறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியுடன் இணைந்திருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமாகும்.

வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து கிழக்கிலங்கைக்கு உட்பட்டிருந்த இப் பாரம்பரிய பிரதேசமானது பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்து நிர்வாக வசதிக்காக பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச எல்லைக்குள் முக்துக்கல், சமணன்பிட்டி, தம்பன்கடவை, கருப்பளை கண்டக்காடு, சொரிவில் திரிகோணமடு, கல்லூர், பிள்ளையாரடி ஆகிய பழம்பெரும் தமிழ்க் கிராமங்கள் காணப்படுகின்றன.

மக்கள் வாழாத இக்கிராமங்கள் சிலவற்றின் ஒதுக்குப் புறங்களில் கைவிடப்பட்ட வயல் நிலங்கள், காடுகள், சிறு மலைகள், ஆதிகால மக்கள் வாழ்ந்த கற்குகைகள் என்பன காணப்படுகின்றன.

இவ்வாதாரங்கள் இக்கிராமங்களுக்கு தொன்மையான தொடர்ச்சியான வரலாற்று மரபு இருப்பதை உறுதி செய்வதாக உள்ளன. இந்த உண்மையை இக்கிரமாங்களில் ஆங்காங்கே காணப்படுகின்ற இந்து, பௌத்த ஆலயங்கள், ஆலய எச்சங்கள் மேலும் உறுதிசெய்கின்றன.

அவ்வாறான வரலாற்றுப் பழைமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றே தற்காலத்திலும் வழிபாட்டிலிருந்து வரும் தம்பன்கடவையில் உள்ள சித்திரவேலாயுதர் கோவிலாகும்.



இவ்வாலயம் தோன்றிய காலத்தை உறுதி செய்யக் கூடிய நம்பகரமான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் அப் பிரதேச மக்களிடையே நிலவிவரும் வாய்மொழி வரலாற்றுக் கதைகளில் இருந்து இவ்வாலயம் முன்பொரு காலத்தில் ஆகம மரபு சாராத கிராமிய ஆலயமாக இருந்துள்ளமை தெரிகின்றது.

வேல் சின்னத்தை கொண்டிருந்த இவ்வாலயம் காலப் போக்கில் ஆகம மரபில் கற்கள் கொண்டு கட்டப்பட்ட ஆலயமாக வளர்ந்துள்ளதை உறுதிப்படுத்த முடிகின்றது.

அண்மைக்காலங்களில் இவ்வாலயக் கட்டமைப்பில் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு மிகப் பெரிய ஆலயமாக மீள் உருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த மீள் உருவாக்கப் பணிகளின் போது கிடைத்த பழைய ஆலயத்தின் கட்டடப் பாகங்களும், சில வழிபாட்டுச் சின்னங்களும் புதிய ஆலயத்தில் வைத்துக் கட்டப்படாது அவை ஆலயத்தின் ஒரு பகுதியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அவற்றுள் ஒன்றேபழைய ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த செப்புப் பட்டயத்துடன் கூடிய அலங்காரத் தூணாகும்.

இந்நிலையில் மன்னம்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் தொல்லியல், வரலாற்றுச் சின்னங்களை தேடிக் கண்டறிந்து அவற்றைப்பதிவு செய்துவரும் இப்பிரதேசத்திற்குரிய வரலாற்று ஆர்வலர் நகுலேஸ்வரன் பிரவின் என்பவர் இவ்வாலயத்தில் காணப்படும் செப்புப் பட்டயத்தின் புகைப்படப் பிரதியொன்றை முன்னாள் சக்தி வானொலி அலைவரிசையின் பிரதானி திருமதி உமாச்சந்திரா பிரகாஸ் ஊடாக எனக்கு அனுப்பி வைத்தார். இச்செப்புப் பட்டயம் ஏறத்தாழ ஐந்தடி நீளமான தூணில் பொறுத்தப்பட்டுள்ளது. தூணின் தொடக்கத்திலும், முடிவிலும் அரைவட்ட தாமரை வடிவம் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

தூணின் நடுப்பகுதியில் முழு வடிவத்தில் வடிவமைக்கப்பட்ட தாமரை புடைப்புச் சிற்பத்திற்கு வலப்பக்கமாக தெலுங்கு மொழியிலும், இடப்பக்கமாக தமிழ் மொழியிலும் சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

தமிழில் உள்ள சாசனம் அக்கால மொழிவழக்கில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "(1) திருமுருகா ஆலயம் ஆரு (2) முகசுவாமி மூலஸ் (3) தானம் வேங்கலப்படி (4) பலபேர் சேர்த்துயா (5) சகதற்மம்" என முடிகின்றது.



தெலுங்கு வரிவடிவத்திலும் தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்ட சாசனத்தைப் படிப்பதற்கு அம்மொழியில் புலமையுடைய அறிஞர்களான பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி, கலாநிதி சு. இராஜகோபால் ஆகியோருக்கு சாசனத்தின் புகைப்படத்தை அனுப்பி வைத்திருந்தேன்.

அம்மூவரும் தமிழ்ச் சாசனத்தில் சொல்லப்பட்ட செய்தியையே பெரும்பாலும் அக்காலமொழிநடைக்கு ஏற்ப தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதன் வாசகம் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "(1) திருமுருகா ஆலயம் ஆரு (2) முகசுவாமி மூலஸ் (3) தானம் வேங்கலப்படி (4) பலபேர் சேர்த்துயா (5) சகதற்மம்" என முடிகின்றது.

வேறுபட்ட இரு மொழிச் சாசனங்களும் சொல்லும் செய்தி தம்பன்கடுவையில் உள்ள சித்திரவேலாயுத கோவில் கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூலஸ்தானத்திற்கு வெங்கலப்படியை அமைப்பதற்கு பலரும் ஒன்று சேர்ந்து மக்களிடம் இரந்து (யாகசம் செய்து) பெற்றதை தானமாக வழங்கியது பற்றிக் கூறுகின்றன. பேராசிரியர் இரகுபதி தமிழில் உள்ள சாசனத்தின் தொடக்க நிலை வரிவடிவங்களில் புள்ளியிடாமலும், தொடர்ந்து வரும் வரிவடிவங்களில் புள்ளியிடப்பட்டும் சாசனம் எழுதப்பட்டிருப்பதால் இச்சாசனம் எழுதப்பட்ட காலம் 18 ஆம் நூற்றாண்டு அல்லது 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் எனக் கருதுகின்றார்.

இக்காலப் பகுதியில் மட்டக்களப்பு தேசத்துக் கோயில்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்கள் சில பொறிக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

அவை பெரும்பாலும் தமிழில் எழுதப்பட்டவை. ஆனால் தம்பன்கடவை சித்திரவேலாயுதர் ஆலயத்து செப்புப்பட்டயத்தில் தமிழோடு தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்டுள்ளமை புதிய வரலாற்றுச் செய்தியாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணங்கள் வரலாற்று ரீதியாக நோக்கப்பட வேண்டியவை.

15ஆம் நூற்றாண்டிலிருந்து மட்டக்களப்பு தேசம் பெரும்பாலும் கண்டி அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிராந்தியமாகவே இருந்துள்ளது. இவ் அரசின் ஆதிக்கம் அநுராதபுரம், பொலநறுவை இராசதானியின் எல்லை வரை பரந்திருந்தது.

கண்டியின் கடைசி சிங்கள மன்னன் ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திர சிங்கனுக்குப் பின்னர் அவ் அரசில் ஆட்சி புரிந்த ஸ்ரீவிஜய ராஜசிங்கன் (1739-1747), கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கன் (1747-1782), ராஜாதிராஜசிங்கன் (1782-1798), ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் (1798-



# த்தில் தமிழ், தெலுங்கு
# டயம் கண்டுபிடிப்பு



ப.புஷ்பரட்ணம்
சிரேஷ்ட பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



1815) ஆகியோர் தமிழக மதுரை நாயக்க வம்சத்தை சேர்ந்தவர்கள்.

இவர்களின் ஆட்சிமொழி தமிழாக இருப்பினும் ஆட்சியாளர்கள்,



அதிகாரிகள் என்பவர்களின் தாய்மொழி தெலுங்காகவும் இருந்துள்ளது. இதனால் இவ் அரச அதிகாரிகளின் பங்களிப்பால் தம்பன்கடவை சித்திரவேலாயுதர் ஆலயத்து வெண்கலப்படி அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறுவதற்கும் இடமுண்டு.

ஆனால் ஆலயத்தில் உள்ள செப்புப்பட்டயம் அவ்வாலய வெண்கலப்படியானது பலர் ஒன்றுகூடி பல இடங்களுக்குச் சென்று மக்களிடம் இரந்து (யாசகம் பெற்று) பெற்ற நிதிஉதவியைக் கொண்டே வெண்கலப்படி அமைக்கப்பட்டதாகக் கூறுவதால் இப்பணியைக் கண்டி ஆட்சியாளர்களுடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

ஆனால் இலங்கையில் கண்டி இராசதானிக்கு முன்னரே தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களும் வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

சிறப்பாக யாழ்ப்பாண இராசதானிகாலத்தில் இருந்த படைப்பிரிவுகளில் சுதேச தமிழ்ப்படை வீரர்களுடன் பிறநாட்டுப் படைவீரர்களும் இணைந்து பணியாற்றியமைக்குப் பல சான்றாதாரங்கள் காணப்படுகின்றன.

அவர்களுள் தென்னிந்திய கன்னட, தெலுங்குப் படைவீரர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவ் அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இப்படை வீரர்களில் ஒரு பிரிவினர் தமிழ் பேசும் மக்களாக இங்கேயே நிரந்தரமாகத் தங்கியுள்ளனர்.

இவர்களில் சிலர் தமிழர்களுடன் இணைந்து வட இலங்கையில் உள்ள ஆலயங்கள் சிலவற்றில் பண்டாரம் என்ற பெயரில் அவ் ஆலயங்களை மேற்பார்வை செய்பவர்களாகவும், பூசகர்களாகவும், மாலைகட்டுபவர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களை கோயில் பண்டாரம் என்ற பெயரில் தனியொரு சமூகமாகவும் அழைக்கப்படுகின்றது. அவர்களின் வழிவந்தவர்கள் தற்காலத்தில் மொழியால் தமிழ்ச் சமூகங்களுடன் இரண்டறக் கலந்திருந்தாலும் பண்பாட்டால் சில தனித்துவமான அம்சங்களுடன் யாழ்ப்பாணத்தின் சில ஊர்களில் வாழ்ந்து வருவதைக் காண முடிகின்றது. இது கிழக்கிலங்கைக்கும் பொருந்தும்.

கிழக்கிலங்கையில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பின் வரலாற்றுப் பழைமை வாய்ந்த ஆலயங்களின் தோற்றப் பின்னணிகள், மக்களின் சமய நம்பிக்கைகள், சடங்குகள், கிரியை முறைகள், வழிபாட்டு மரபுகள் என்பவை சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டவை.

இங்கு தோன்றிய பாசுபத சமயத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. இவ் ஆலயங்களில் நீண்டகாலமாக பிராமணர்கள் அல்லாதவர்களே பூஜை செய்து வந்துள்ளனர். இதற்கு கோணேஸ்வரர் கல்வெட்டே சிறந்த ஆதாரமாகக் காணப்படுகின்றது.

மேலும் இங்கிருக்கும் ஆலயங்களை நிர்வகிப்பவர்கள், மேற்பார்வை செய்பவர்கள் பொதுவாக வண்ணக்கர் என்றே அழைக்கப்படுகின்றனர்.

இம்மரபு 2200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தோன்றி வளர்ந்ததை அண்மையில் மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனமும் உறுதிப்படுத்துகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற மூலநூலில் இங்குள்ள ஆலயங்களில் பணிசெய்த சமூகங்களில் ஒன்றாக பண்டாரத்தையும் குறிப்பிடுகின்றது.

அப்பண்டாரங்களில் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் இருந்திருக்க வாய்ப்புண்டு. ஆயினும் அதை உறுதிப்படுத்த மேலும் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இருப்பினும் இப்பிரதேசத்தில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட சில சமூகங்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதற்கு சில ஆதாரங்கள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு தேசத்து வாய்மொழி வரலாற்றுக் கதைகள் அப்பிரதேசத்தில் தோன்றிய புராதன ஆலயங்கள் சிலவற்றை அங்கு வாழ்ந்து வரும் வேடர் அல்லது பழங்குடி மக்களுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றன.

நீண்டகாலமாக ஏனைய சமூகங்களில் இருந்து விலகி காடுகளிலும், மலைகளிலும், இயற்கையான குகைகளிலும் வாழ்ந்த இம்மக்களில் ஒரு பிரிவினர் அண்மைக் காலத்தில் நடைபெற்ற யுத்தங்களுக்கு அஞ்சி நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்த போது ஏனைய மக்கள் தொடர்ந்தும் தமது பூர்வீக இடங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள இம்மக்களின் தனித்துவமான வாழ்வியல் அம்சங்கள் பற்றி அண்மையில் விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் கா.குகபாலன் அம்மக்களின் பேச்சு மொழியில் உள்ள பல சொற்களைப் புரிந்து கொள்வதற்காக அம்மொழியைப் பதிவு செய்து தமிழக அறிஞர்களான பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர். விஜயவேணு கோபால் ஆகியோருக்கு அனுப்பி வைத்தார்.

அம்மொழிப் பதிவை விரிவாக ஆராய்ந்த இரு அறிஞர்களும் அம்மொழியில் பெரும்பாலும் தெலுங்கு மொழிச் சொற்களே காணப்படுவதாக அடையாளப்படுத்தியிருந்தமை இவ்விடத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2017 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இப்பழங்குடி மக்கள் வாழ்ந்து வரும் மட்டக்களப்பின் வாகரை போன்ற இடங்களில் நாம் களவாய்வு மேற்கொண்ட போது அம்மக்கள் சிறு குடிசைகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வருவதைக் காண முடிந்தது.

இந்நிலையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் மன்னம்பிட்டி தம்பன்கடவையில் பண்டைய குடியிருப்புகள், வயல் நிலங்கள் இருந்த இடங்கள் அண்மைக்காலங்களில் கைவிடப்பட்டு அவ்விடங்களின் ஒருபகுதி காடுகள், மலைகள், குகைகள் என்பவற்றைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது.

அத்துடன் அங்குள்ள குகைகளில் செயற்கையான சில மாற்றங்களைச் செய்து அண்மைக்காலம் வரை பழங்குடி மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுவதுடன் அச்சமூகத்தினரைச்சார்ந்தசில குடும்பங்கள் தற்காலத்திலும் வாழ்ந்து வருவதாக அறிய முடிகின்றது.

இதனால் அவர்களின் தாய்மொழி தெலுங்காக இருந்திருக்கலாம். இவ் வரலாற்றுப் பின்னணியில் இங்கிருக்கும் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் காணப்படும் தெலுங்கு மொழிச் சாசனத்தை இங்கு வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற பழங்குடி மக்களுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கவும் இடமுண்டு. இருப்பினும் இக்கருத்தை உறுதிப்படுத்த மேலும் ஆய்வுகள் செய்யப்படுவது அவசியமாகும்.






## ஆப்கானுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது குறித்து ஜெனீவாவில் விவாதம்

(ஜெனீவா)

தலிபான்களின் ஆட்சியின் கீழ் ஆப்கானிஸ்தானுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்து விவாதிக்க சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் நேற்று திங்கட்கிழமை ஜெனீவாவில் கூடியது.இதற்கிடையில் அண்டை நாடுகளான சீனாவும் பாகிஸ்தானும் ஏற்கனவே ஆப்கானிஸ்தானுக்கு உதவிகளை வழங்கியுள்ளதுடன், எதிர்கால உதவிகள் பற்றிய கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளன.

இந்நிலையில் மனித உரிமைகளை பேணுவது, குறிப்பாக பெண்களின் உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பான உத்தரவாதத்தை தலிபான்கள் அளிக்கும் வரை ஆப்கானிஸ்தானுக்கு உதவ அமெரிக்கா மற்றும் பிற மேற்கு நாடுகள் தயங்குகின்றன.

கடந்த மாதம் தலிபான்கள் ஆட்சியைப் கைப்பற்றிய பின்னர் ஆப்கானுக்கு முதல் வெளிநாட்டு உதவிக்கான உறுதி மொழியை சீனா வழங்கியது. 31 மில்லியன் டொலர் மதிப்புள்ள உணவு மற்றும் மருந்துப் பொருட்களை ஆப்கானுக்கு அனுப்புவுள்ளதாக சீனா கடந்த வாரம் அறிவித்தது.

பாகிஸ்தான் கடந்த வாரம் காபூலில் உள்ள அதிகாரிகளுக்கு சமையல் எண்ணெய் மற்றும் மருந்து போன்ற பொருட்களை அனுப்பியது. இதேவேளை, லித்தியம் உட்பட ஆப்கானிஸ்தானில் உள்ள கனிம வளங்களைக் கவரும் நோக்கிலேயே சீனா ஆப்கானிஸ்தானை நெருங்கி வருவதாக சந்தேகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. (7-4)

# இந்தியாவின் ஆறாவது தடுப்பு மருந்தாக 'ஜைடஸ் கேடில்லா' அறிமுகம்

(டெல்லி)

**ஊசியில்லா கொரோனா தடுப்பு மருந்து அடுத்த மாதம் இந்தியாவில் அறிமுகமாக உள்ளது.**




zydus cadila நிறுவனத்தின் ஊசியில்லா கொரோனாத் தடுப்பூசியான zycov-d மருந்து அடுத்த மாதம் முதல் வாரம் இந்தியாவில் அறிமுகமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த மாதம் மத்தியில் இருந்து தடுப்பு மருந்து விநியோகம் ஆரம்பமாகும் என்றும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் கிடைக்கத் தொடங்கும் என்றும் நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் கூறியுள்ளார்.

முதலில் மாதத்திற்கு ஒரு கோடி தடுப்பு மருந்தும் பிறகு தயாரிப்பு இலக்கு அதிகரித்து மாதத்திற்கு 4 கோடி முதல் 5 கோடி வரை தடுப்பு மருந்தும் விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் 6 வது தடுப்பு மருந்தாக 'ஜைடஸ் கேடில்லா' என்ற இந்திய நிறுவனம் தயாரித்துள்ள, முதல் மரபணு (டி.என்.ஏ) தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட கொரோனத் தடுப்பு மருந்தான ஜை கோவ்-டி'க்கு இந்திய மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் அவசர கால பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கிஉள்ளது. இது, 12 முதல் 18 வயதுடைய பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ள முதல் தடுப்பு மருந்தாகும். மேலும், ஊசி மூலம் செலுத்தப்படாத உலகின் முதல் கொரோனா தடுப்பு மருந்து என்ற பெருமையையும் இது பெற்றுள்ளது. (7-4)

## பேரறிவாளன் மருத்துவமனையில் அனுமதி

(டெல்லி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று தற்போது பரோலில் உள்ள பேரறிவாளன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி உள்ளிட்ட 7 நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறுநீரக தொற்று, வயிற்று வலிகாரணமாக அவர் அவதிப்பட்டு வந்துள்ளார்.



இதன் காரணமாக விழுப்புரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக பேரறிவாளன் அனுமதிக்கப்பட்டுள்ளார். (7-4)

## விண்வெளி சுற்றுலாவுக்கு தயாராகும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்

(வோஷிங்டன்)

விண்வெளி சுற்றுலாத் தொழில் உலகளவில் பிரபமடைய தொடங்கியுள்ளது. இதன் ஒருபகுதியாக அமெரிக்காவை சேர்ந்த ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் எலான் மஸ்க்கின் ராக்கெட் மூலம் ஷிப்ட் 4 பேமன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜாரிட் ஐசக்மேன் என்ற கோடீஸ்வரனின் தலைமையிலான 4 பேர் கொண்ட குழுவினர் இந்த வாரம் விண்வெளிக்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

இந்த பயணத்திற்கான கவுண்டவுன் நாளை தொடங்கவுள்ள நிலையில், இன்ஸ்பிரேஷன் - 4 என்று பெயரிடப்பட்டுள்ள விண்கலம் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் என்.9 என்ற ராக்கெட் மூலம் விண்ணில் பாய தயாராகிவருகிறது. மணிக்கு 27 ஆயிரத்து 300 கிலோ மீற்றர் வேகத்தில் சீறிப்பாயும் இந்த விண்கலம், 90 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை முழுவதுமாக சுற்றி வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 நாட்கள் விண்வெளி பயணத்திற்கு பிறகு அட்லாண்டிக் கடலில் பயணம் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விண்வெளிக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட முதல் பொதுமக்கள் என்ற சிறப்பை இந்த 4 பேரும் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(7-4)

## அணு சக்தி திட்டங்களை மேற்பார்வை செய்ய ஐ.நாவுக்கு ஈரான் மீண்டும் அனுமதி

(தெஹ்ரான்)

அணு சக்தி திட்டங்களை மேற்பார்வை செய்ய ஐ.நாவின் சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்கு மீண்டும் ஈரான் அனுமதி வழங்கியுள்ளது.

ஈரான் அணுசக்தி அமைப்பின் தலைவர் முகமது எஸ்லாமி மற்றும் ஐ.நாவின் சர்வதேச கண்காணிப்பு அமைப்பு தலைவர் ரஃபேல் க்ரோசி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இருவரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டது.

புதிய ஒப்பந்தம் மூலம் ஏற்கனவே ஈரான் அணுசக்தி தளங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராங்களில் புதிய சேமிப்பு நினைவகங்களை பொருத்த ஐ.நாவின் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

"ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா தளர்த்தாவிட்டால் தங்களது அணுசக்தி மையங்களுக்குள் ஐ.நாவின் சர்வதேச கண்காணிப்பு அமைப்பு பொருத்தியுள்ள கண்காணிப்பு கமராக்கள் அகற்றப்படும்" என, ஈரானின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளி விவகாரங்களுக்கான பிரிவு அறிவித்திருந்தது.

இவ்வாறான நிலையிலேயே நிலைமைகளை சுமூகமாக்கும் நோக்குடன் தனது அணு சக்தி திட்டங்களை மேற்பார்வை செய்ய ஐ.நாவின் சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்கு மீண்டும் ஈரான் அனுமதி வழங்கியுள்ளது. (7-4)

## ஸ்பெயினில் காட்டுத் தீ

(மெட்ரிட்)

ஸ்பெயினின் தென் பிராந்தியமான அண்டலூசியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக சுமார் 2,000 பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

கோஸ்டா டெல் சோலில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலா நகரமான எஸ்டெபோனாவில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த தீவிபத்தில் சிக்கிதீயணைப்பு வீரர் உயிரிழந்துள்ளார்.

மலைப்பகுதியில் பரவி வரும் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்களுடன் இராணுவப் பிரிவும் இணைந்து பணியாற்றிவருகின்றனர்.இதனால் அங்கு வசிக்கும் ஆறு நகரங்கள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர். (7-4)

# மனிதவள அபிவிருத்தியில் சீரான அணுகுமுறையை இலங்கை பின்பற்றும்

## இத்தாலியில் பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

மனிதவள அபிவிருத்திதொடர்பில் ஒரு சீரான அணுகுமுறையை பின்பற்ற இலங்கை முயற்சித்து வருகிறது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டின் ஆரம்ப தினமான நேற்று முன் தினம் (ஞாயிற்றுக் கிழமை) முதனாவது அமர்வில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளதாவது, "கால நிலை மாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்தும் நாம் முக்கியத்துவமளித்து செயற்பட்டு வருகின்றோம்.

மனிதவள அபிவிருத்திதொடர்பில் ஒரு சீரான அணுகுமுறையை பின்பற்ற இலங்கை முயற்சித்து வருகிறது. வேகமாக வளர்ச்சியடையும் மக்கள் தொகைக்கு ஆதரவளிக்க பொருளாதார பிரச்சினைகள் குறித்த முன்னேற்றம் அவசியமான போதிலும், நிலவும் சூழலில் அது முடியாததொரு விடயமாகும்.

நல்லிணக்கம் என்பது நம் காலத்தின் முக்கியமான தேவையாகும். மோதல்களும் நம்மைச் சுற்றி அதிகரித்து வரும் இடையூறுகளும் பொதுவானவை.

எங்களுடன் வலுவாக உடன்படாதவர்கள் உட்பட நம் நாடுகளில் வாழும் அனைவருடனுமான சிறந்த உறவின் மூலமே சமாதானமும் ஸ்திரத்தன்மையும் ஏற்படுகிறது.

வெறுப்பை வெறுப்பால் அல்ல அன்பினால் மட்டுமே வெல்ல முடியும் என்றே நம் மதம் நமக்கு போதிக்கிறது.

கடந்த காலத்தின் குறைகளைப் பற்றி விவாதிப்பதற்குப் பதிலாக, நாம் நிகழ் காலத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

நாம் சகோதரத்துவம் மற்றும் புரிதலின் ஊடாக உறவுகளை வளர்த்துக் கொண்டால் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் அற்புதமான புதிய எல்லையை அடையலாம்.

ஐரோப்பாவின் பழமையான கற்றல் மையமான போலோக்னாவில் நடைபெறும் இந்த உற்சாகமூட்டும் மாநாடு அதற்கு மதிப்புமிக்க பங்களிப்பை அளிக்கிறது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# மதுபான நிலையங்களையும் திறப்பதற்கு நடவடிக்கை

## மதுவரித் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் சகல சில்லறை மதுபான நிலையங்களையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நீண்ட காலத்திற்கு பின்னர் மதுபான சாலைகளை திறக்கப்படவுள்ளதால், அதிகளவான வாடிக்கையாளர்கள் கூடுவதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இதன் போது சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் மதுவரி திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(நி-5)

# பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற குழுத் தலைவராக பசில்

## அறிவிப்பு விரைவில் வெளியாகும்



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக்குழுத் தலைவராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளார் என்று அரசியல் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்ஷ அண்மையில், தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன், நிதியமைச்சராகவும் பதவியேற்றிருந்தார்.

இந்த நிலையில் அவரை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுத் தலைவராக நியமிக்குமாறு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றக்குழுத் தலைவராக அங்கீகரிக்கும் அறிவிப்பை சபாநாயகர் விரைவில் வெளியிடுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தேர்வு எழுதுவது எப்படி?

இந்தக் காலத்துப் பையன் எதற்கும் பயப்பட மாட்டான். ஆனால் ஒரு விடயத்திற்குப் பயப்படுவான். என்ன அது?

பரீட்சை தான். வேறு என்ன? தேர்வு நெருங்க பரீட்சை ஜுரமே வந்துவிடும் சில பேருக்கு. படிக்காமல் இருந்தால் தான் பரீட்சை பயமுறுத்தும். ஆரம்பத்தில் இருந்தே நல்லா படித்துக் கொண்டு வந்தால் கடைசி நேரத்தில் பரீட்சையைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இருக்காது. சரி... இப்பொழுது பரீட்சை வந்துவிட்டது. அதை நல்லவிதமாக எழுதுவது எப்படி? அதற்குச் சில ஆலோசனை சொல்லியிருக்கின்றாங்கள் பெரியவர்கள். படிக்கிற பிள்ளைகள் இதைக் காதிலே வாங்கி வைத்துக் கொள்வது நல்லது.

10 மணிக்கு பரீட்சை ஆரம்பம் என்றால் 8 மணிக்கே எல்லா பாடங்களையும் ஒரு தடவை புரட்டிப் பாத்துக் கொள்வது நல்லது.

பரீட்சை எழுத பள்ளிக் கூடம் புறப்படுகின்றீர்கள். அப்பொழுது உங்களுக்கு வீட்டில் யார்மேல் மிகப் பிரியமோ அல்லது யாருக்கு உங்கள் மேல் மிகப் பிரியமோ அவர்களிடம் சொல்லிக் கொண்டு புறப்படுங்கள். அரை மணி நேரத்திற்கு முன்னால் அங்கே போய் இருங்கள். கடைசி நேரத்தில் அரக்கப் பரக்க ஓடி.. இடத்தைத் தேடி நம்பரைத் தேடி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

பரீட்சை எழுதுவதற்கு முன்னால் வெளியே நின்று கொண்டிருக்கின்ற ஏனைய பையன்களிடம் பாடத்தைப் பற்றி சந்தேகம் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். சில சமயம் அது குழப்பமாகப் போய்விடும். உங்களுக்குத் தெரிந்தது உங்களோடு இருக்கட்டும். அவர்களுக்குத் தெரிந்தது அவர்களோடு இருக்கட்டும். பத்து நிமிடத்திற்கு முன்னாடியே தேர்வு அறைக்குள்ளே நுழைந்துவிடுங்கள். தெரிந்தோ தெரியாமலோ உங்கள் சட்டைப் பைக்குள்ளே ஏதாவது காகிதத் துண்டு இருந்தால் தூக்கிப் போட்டுவிடுங்கள். அது என்னத்திற்கு.

மணியடிக்கிறதிற்கு முன்னால் வேணும் என்றால் அறையை சுற்றிநோட்டம் விடலாம். யார் யார் எங்கே இருக்கின்றார்கள் என்று பார்க்கலாம். மணியடித்ததன் பின்பு சுந்தரம் எங்கே இருக்கின்றான்.. சோமு எங்கே உட்கார்ந்திருக்கின்றான் என்று பார்த்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் நேரம் வேஸ்ட். நிதானமாக ஒரு தடவை கண்ணை மூடிக்கொண்டு படித்ததை நினைத்துப் பாருங்கள். விடைத்தாள் கொடுத்தவுடன் அதைக் கவனமாக பூர்த்தி செய்வார்கள். உங்கள் நம்பரை உரிய இடத்தில் எழுதுங்கள். தேர்வாளர் கையொப்பம் விடைத்தாளிலே இருக்கா என்று உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

வினாத்தாள் கொடுத்தவுடனே.. நிதானமாக அதிலே உள்ள குறிப்புக்களை படியுங்கள். எத்தனை கேள்விக்குப் பதில் எழுதச் சொல்லியிருக்கின்றார்கள். எத்தனை கேள்விக்குப் பதில் தெரியும்.. என்று முடிவு செய்து கொள்ளுங்கள். தெரியாத கேள்வியைப் பற்றி மனதை அலட்டிக் கொள்ள வேண்டாம். எந்தக் கேள்விக்கு நல்லா பதில் எழுதத் தெரியுமா அந்தக் கேள்விக்கு முதலில் பதில் எழுதுங்கள்.. முதல் இரண்டு மூன்று பக்கம் கொஞ்சம் நிறுத்தி நிதானமாக அழகாக எழுதுங்கள்.. அதன்பின்பு நேரத்திற்குத் தகுந்த மாதிரி பார்த்துக் கொள்ளுங்கள்.

எழுதி முடித்ததும் அந்தக் கேள்வியிலே டிக்மார்க் செய்து கொள்ளுங்கள். இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி அந்த நேரத்திலே பதில் எழுத வேண்டும். கேள்விக்குத் தகுந்த பதில் போதும். உங்களுக்கு நிறைய தெரியும் என்பதால் தெரிந்ததையெல்லாம் வளவள என்று எழுதிக் கொண்டிருக்கக் கூடாது. பதில் எழுதும்போது தொடர்ச்சியாக எழுதிக் கொண்டே போகக் கூடாது. சின்ன சின்னப் பந்தியாகப் பிரித்து எழுத வேண்டும். தாராளமாக மார்ஜின் விட வேண்டும். ஒரே கேள்விக்கு இரண்டு இடத்திலே பதில் எழுதக் கூடாது. இப்படிச் சில பேர் எழுதுவது உண்டு. திருத்துபவர்கள் ஏமாந்து போய் மார்க் போட்டுவிடுவார்கள் என்று நினைத்துக் கொண்டு. அப்படியெல்லாம் ஏமாற மாட்டார்கள். அதிகப்படியான விடைத்தாள்கள்( Additional Sheets) வாங்குகின்ற பொழுது உங்கள் நம்பர், பக்கமெல்லாம் சரியாக போட வேண்டும். தேர்வாளர் கையொப்பம் எல்லா இணைத்தாள்களிலேயும் இருக்கின்றதா என்று சரி பாக்க வேண்டும்.

முதலில் தெரிந்த கேள்விக்கெல்லாம் பதில் எழுதிவிடுங்கள். பின்பு தெரியாத கேள்வியாக இருந்தாலும் உங்களுக்குத் தெரிந்த அளவுக்குப் பதில் எழுதுங்கள். அதை விட்டுவிட வேண்டாம். எல்லாம் எழுதி முடித்ததன் பின்பு கடைசியாக ஒரு தரம் சரி பாருங்கள். கால்புள்ளி அரைப்புள்ளி விடுபட்டிருந்தால் அதையெல்லாம் வைக்கலாம்.

கேள்வி நம்பர்- பக்கம் நம்பர் எல்லாம் சரியாக இருக்கா என்று பார்த்துக் கொள்ளுங்கள். மணியடித்ததும் நிதானமாக விடைத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியிலே வாருங்கள். வீட்டுக்குப் போனவுடனே அடுத்த பரீட்சைக்கான புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடாதீர்கள்.

ஒரு மணி நேரமாவது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதன்பின்பு அடுத்த பரீட்சைக்குப் படிக்கலாம். ஒரு பரீட்சையில் நிறைய மார்க் வாங்கின இரண்டு பையன்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருத்தன் சொன்னான்.

வீட்டிலே படிக்கின்ற பொழுது எனக்கு ஏதாவது பாடத்திலே சந்தேகம் வந்தால் உடனே எங்கள் அப்பாவைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். அதனாலே தான் அதிக மார்க் வாங்க முடிந்தது என்றான். அதற்கு இவன் எனக்கு பாடத்திலே சந்தேகம் வந்தால் உடனே எங்கள் அப்பாவிடம் கேட்கமாட்டேன். அதனால் தான் அதிக மார்க் வாங்க முடிந்தது என்கின்றான்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

36

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் ஐந்து கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அவ் ஐந்து கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி (705, 188), ஐக்கிய தேசியக்கட்சி (257, 011), ஜனநாயக் கட்சி (46,114), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (27,860), மக்கள் விடுதலை முன்னணி (19,624), அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 36இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 36- வடமேல்மாகாண சபைத் தேர்தல் 2013

கட்சிகள் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | கட்சிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | DP | JVP | SLMC | மொத்தம் |
| குருநாகல் | 23 | 7 | 2 | 1 | 1 | 34 |
| புத்தளம் | 9 | 5 | 1 | - | 1 | 16 |
| Bonus | 2 | - | - | - | - | 2 |
| மொத்தம் | 34 | 12 | 3 | 1 | 2 | 52 |

DP- ஜனநாயக் கட்சி

## மத்திய மாகாணசபைத் தேர்தல்-2013

மத்திய மாகாணத்தில், 17 அரசியல் கட்சிகளும் 8 சுயேச்சைக் குழுக்களும் கண்டி மாவட்டத்திலும், 13 அரசியல் கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களும் மாத்தளை மாவட்டத்திலும், 14 அரசியல் கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும் நுவரெலியா மாவட்டத்திலும் போட்டியிட்டன. தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 58, இரண்டு Bonus உறுப்பினர்களுடன் ஆகும். 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

போட்டியிட்ட கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜனநாயகக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஜனசெத பெரமுன, சமாஜ்வாதி ஜனதா பெரமுன, நமது தேசிய முன்னணி, எக்ஸத் லங்கா மஹா சபா, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, எக்ஸத் சமாஜவாதி பக்சய, புதிய ஜனநாயக முன்னணி, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, ருஹுணு ஜனதா பக்சய, நவ சிஹல உறுமய, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, முஸ்லிம் விடுதலை முன்னணி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியனவாகும்.

ஈழவர் ஜனநாயக முன்னணி, சமாஜவாதி ஜனதா பெரமுன, எக்ஸத் சமாஜவாதி பக்சய, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய ஆகிய 4 கட்சிகள் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, சமாஜ்வாதி ஜனதா பெரமுன, எக்ஸத் சமாஜவாதி பக்சய, புதிய ஜனநாயக முன்னணி, நவ சிஹல உறுமய, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகிய 8 கட்சிகள் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா மக்கள் கட்சி,நமது தேசிய முன்னணி, புதிய ஜனநாயக முன்னணி, நவ சிஹல உறுமய, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகிய 7 கட்சிகள் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 37இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 37
மத்திய மாகாணசபை 2013

| | |
|---|---|
| A | 1,889,557 |
| B | 1,272,669 |
| C | 82,161 |
| D | 1,190.508 |

போட்டியிட்ட கட்சிகளில்/ குழுக்களில் ஆறு கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அவ் ஆறு கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (716, 247), ஐக்கிய தேசியக் கட்சி (330, 815), ஜனநாயக் கட்சி (45,239), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (17,788), மலையக மக்கள் விடுதலை முன்னணி(24,913), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (29, 285) அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 38இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 38- மத்திய மாகாண சபைத் தேர்தல் 2013

| மாவட்டம் | கட்சிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | DP | CWC | மமமு | SLMC | மொத்தம் |
| கண்டி | 16 | 9 | 2 | 1 | - | 1 | 29 |
| மாத்தளை | 7 | 3 | - | 1 | - | - | 11 |
| நுவரெலியா | 11 | 4 | - | - | 1 | - | 16 |
| Bonus | 2 | - | - | - | - | - | 2 |
| மொத்தம் | 36 | 16 | 2 | 2 | 1 | 1 | 58 |

DP - ஜனநாயக் கட்சி, CWC-இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மமமு- மலையக மக்கள் முன்னணி, SLMC-ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## முதலாவது வட மாகாண சபைத் தேர்தல் பற்றி..

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 ஒக்டோபர் 29 இல் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் இலங்கை அரசு அதன் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாகும். இதன்படி 1987 நவம்பர் 14 இல் இலங்கை பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது.

1988 பெப்ரவரி 3 ஆம் திகதி ஒன்பது மாகாண சபைகள் உருவாகக்ப்பட்டன. மாகாண சபைகளுக்கான முதலாவது தேர்தல்கள் 1988 ஏப்ரல் 28 ஆம் திகதி வட மத்திய, வடமேல், சப்ரகமுவ, மற்றும் ஊவா ஆகிய மாகாணங் களுக்கு இடம்பெற்றன. 1988 ஜுன்2 இல் மத்திய, தெற்கு, மற்றும் மேற்குமாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. அன்று இலங்கையின் ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஏழு மாகாணசபைகளினதும் ஆட்சியைக் கைப்பற்றியது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர இணக்கம் காணப்பட்டது. இவ் விணைப்பு நிரந்தர இணைப்பாக இருப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் 1988 டிசெம்பர் 31 இற்குள் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும், இந்த பொது வாக்கெடுப்பை ஒத்திவைக்க இலங்கை அரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1988 செப்டெம்பர்2 இல் அரசுத்தலைவர் ஜே. ஆர். ஜெயவர்தனா இருமாகாணங்களையும் இணைத்து வடக்கு கிழக்கு மாகாண சபை என்ற ஒரு மாகாண சபையாக நிர்வகிக்க உத்தரவு பிறப் பித்தார். இந்த இணைந்த மாகாண சபைக்கான தேர்தல் 1988 நவம்பர் 19 இல் நடத்தப்பட்டது. இந்தியாவின் ஆதரவில் இயங்கிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இத்தேர்தலில் வெற்றி பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி இத தேர்தலில் பங்கேற்கவில்லை.

1990, மார்ச் 1 அன்று, இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையை விட்டுப் புறப்படும் தறுவாயில், வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் மாகாண சபைக் கூட்டத்தில் தமிழீழத்தைப் பிரகடனப் படுத்தினார்.

இதனை அடுத்து அரசுத் தலைவர் பிரேமதாசா மாகாண சபையைக் கலைத்து, நடுவண் அரசின் நேரடி ஆட்சியைக் கொண்டு வந்தார்.

1993 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்குத்த விர்ந்த ஏழு மாகாணங்களுக்கு 2 ஆவது தேர்தல்கள் இடம் பெற்றன. ஆறு மாகாணங்களில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

மேற்கு மாகாண சபையை முக்கிய எதிர்க் கட்சிக் கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பற்றியது. தெற்கு மாகாணத்தில் ஐதேகவின் சில உறுப்பினர்கள் கட்சி மாறியதை அடுத்து அங்கு 1994 ஆம் ஆண்டில் சிறப்புத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது.

(தொடரும்...)

# அதிகளவான டெங்கு நோயாளர்கள் குறுகிய காலத்தில் அடையாளம்

**(கொழும்பு)**

**நாட்டில் கடந்த 9 மாத காலப்பகுதியில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்தஆண்டுஜனவரிமாதம் முதல் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் 12 ஆயிரத்து 102 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்டு ள்ளது.

இதில் சுமார் 39.8 வீத மான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 4 ஆயிரத்து 828 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் அங்கு பதிவாகிய மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 994 பேர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# 623 பொருட்களுக்கான வைப்புத்தொகை அதிகரிப்பால் கறுப்புச் சந்தை உருவாகும்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

623 பொருட்களுக்கான வைப்புத்தொகை அதிகரித்திருப்பதால், நாட்டில் கறுப்புச் சந்தை உருவாகுவதற்கான அதிக வாய்ப்புள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் இது அரசாங்கத்தின் தோல் வியை மீண்டும் காட்டுகிறது.

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத சூழ்நிலையில் தற்போது அரசாங்கம் இருக்கின்றது.

இலங்கை மத்திய வங்கியால் 623 அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான வைப்புத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டில் கறுப்புச் சந்தை உருவாகுவதற்கான அதிக வாய்ப்பு உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### நவக்கிரக தோஷம் நீக்கும் மகாளய அமாவாசை



மகாளய பட்சம் என்பது 15 நாட்கள் ஆகும். 'மறந்து விட்டதை மகாளயத்தில் விடு' என்பது பழமொழி. நமது மூதாதையர்கள் இறந்து போன திகதி தெரியாதவர்கள், மகாளய பட்சத்தில் தர்ப்பணம் செய்தால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக ஐதீகம்.

மரணமடைந்த நமது முன்னோர்களின் ஆவியானது, ஒரு குறிப்பிட்ட காலம் வரை பூமியில் சுற்றிக் கொண்டு இருக்குமாம். பின்னர் விண்ணுலகம் நோக்கி செல்லும். பித்ருக்கள் உலகம் என்று ஒன்று உள்ளது.

இது சூரிய, சந்திர மண்டலத்திற்கும் அப்பால் உள்ளது. சொர்க்க லோகம் போன்று காட்சியளிக்கும். அங்கு பித்ருக்கள், ஆதி என்பவர் கட்டுப்பாட்டில் வசிக்கின்றனர்.

அனைத்து வசதிகள் அங்கு இருந்த போதிலும் அவர்களுக்கு வேண்டிய உணவு வகைகளை தாங்களே எடுத்துக் கொள்ள முடியாது. தங்கள் பிள்ளைகள், உறவினர்களுக்கு சேர்த்து வைத்த சொத்துக்களுக்கு கைமாறு தர வேண்டும் என அவர்கள் கேட்டனர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 737 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப்பகுதியில் மேலும் 737 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 92 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 70 ஆயிரத்து 694 பேர் கைது செய்யப்பட்டனர். (ந-5)

## மேலும் 76000 பைசர் தடுப்பூசிகள் வந்தடைந்தன



(கொழும்பு)

இலங்கைக்கு 76 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் அதிகாலை வந்தடைந்தன. நெதர்லாந்தில் இருந்து குறித்த தடுப்பூசி தொகை கட்டார் ஊடாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இலங்கையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஸ்புட்னிக் - வி தடுப்பூசியும் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசியும் இந்த வாரம் நாட்டுக்கு கிடைக்கப்பெறவுள்ளன. (ந-5)

## பிறந்து ஆறு நாட்களில் கொரோனாவால் பலியான குழந்தை

(கொழும்பு)

பலங்கொட வைத்தியசாலையில் 6 நாட்களான குழந்தை ஒன்று கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளது.

5 ஆம் திகதி பிறந்த குறித்த குழந்தை சுவாசப் பிரச்சினை காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை குறித்த குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## அறுவடை செய்த வயல் நிலங்களுக்கு விஷமிகளால் தீ வைப்பு



(திருமலை)

திருகோணமலை கொழும்பு பிரதான வீதியின் கந்தளாய் பகுதியில் அறுவடை செய்த வயல் நிலங்களுக்கு இனந் தெரியாதோரால் தீ மூட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதி புகை மண்டலமாக காணப்பட்டது. இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பேராற்றுவெளி பகுதியிலுள்ள வயல் நிலங்களில் அறுவடைகள் மேற்கொண்ட வயல்களிலேயே இவ்வாறு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)




## முட்டாள் பையன்

குதிரை மீதேறி இளவரசியின் கூடத்துக்கு முதலில் சென்று, யார் அவளிடமிருந்து மோதிரத்தைப் பெற்று வருகிறாரோ அவருக்கு அவளைத் திருமணம் செய்து தருவதாக அரிவித்திருக்கிறார்" என்று அறிவித்தான்.

சுந்தரத்தின் சகோதரர்களும் அங்கு செல்ல ஆயத்தமாயினர். இளவரசியைக் கைபிடிக்கும் போட்டியில் கலந்து கொள்வது அவர்களது நோக்கமல்ல.

அதற்குப்பதில் வேடிக்கை பார்ப்பதற்காகவே, அவர்கள் அங்கு செல்ல விரும்பினர்.

தன்னையும் அழைத்துச் செல்லும்படி மன்றாடினான் சுந்தரம். ஆனால், அவர்கள் கேலியாகச் சிரித்தனர்.

"உன்னைப் போன்று முட்டாள் அங்கு வந்து என்ன செய்ய முடியும்? மேலும், அவர்கள் உன்னைக் கண்டால் நகைப்பர்.

பேசாமல் உன் கணப்பு அடுப்பின் மீது போய் படுத்துத் தூங்கு," என்று கூறினர்.

சகோதரர்கள் சென்றதும், தான் காளான் பறிக்கப் போவதாக, தந்தையிடம் கூறிவிட்டு, கிராம எல்லையைக் கடந்து, மூன்று முறை விசில் அடித்து, "தவிட்டு நிறக் குதிரையே, வெள்ளைப் புரவியே, இங்கு வந்து என் விருப்பத்தை நிறைவேற்று," என்று கூவினான்.



உடனே, பூமி அதிர ஆரம்பித்தது. அடுத்த கணம் அங்கு குதிரை நின்று கொண்டிருந்தது.

குதிரையை பார்த்து, தன் விருப்பத்தை கூறினான்.

"நல்லது. என் வலது காதுக்குள் நுழைந்து இடது காது வழியாக வெளியே வா," என்றது குதிரை.

(தொடரும்)

# மகாபாரதம்




அவன் உலகத்தில் பகையைப் பெற்றுப் பயனற்ற கதியை அடைவான், போகும் இடமெல்லாம் "இவன் என்னால் இவ்வாறு சொல்லப்பட்டான்.

அதனால் வெட்கம் அடைந்து செயலற்றுக் கிடக்கிறான்" எனத் தற்பெருமை பேசும் அற்பனை அடக்கும் உள்ளவன் அலட்சியம் செய்ய வேண்டும். அற்பன் பேசும் பேச்சுக்களைச் சகித்துக் கொள்ள வேண்டும்.

பிறரைப் பழித்துப் பேசிப்பழக்கப்பட்ட ஒருவன் தன் தாயைப் பற்றிக் கூட அடாத பழி கூறுவான்.

மறைக்க வேண்டிய அந்தரங்க உறுப்பை மறைக்காமல் வெளிக்காட்டி ஆடும் மயில் போல அவன் மகிழ்ச்சி அடைவான். பழி தூற்றும் பேதையிடம் நல்லவர்கள் பேச்சுக் கொடுக்கக் கூடாது.

எவன் நேரில் புகழ்ந்தும் மறைவில் குறை கூறியும் பேசுகிறானோ அவன் உலகில் நாய் போன்றவன் ஆவான்.

ஞானமும், கல்வியும், தருமமும் இழந்தவன் ஆவான். அவனிடம் இருக்கும் சில நல்ல குணங்களும் பிறர் மீது பழி கூறும் இயல்பால் நாசமடைகின்றன.

ஆதலால், நல்லறிவுள்ளவன் பாப புத்தியுள்ளவனும், விலக்கத் தக்கவனுமான அவனை நாயின் மாமிசத்தைப் போல உடனே விலக்க வேண்டும்.

மக்கள் கூட்டத்தில் பிறர் குற்றத்தைச் சொல்பவன் பாம்பானது உயர்ந்த படத்தை வெளியிடுவது போலத் தன் குற்றங்களைத் தானே வெளியிடுபவன் ஆவான்.

அடக்கமின்றி பிறர் பழி கூறித் திரியும் அவனை மதம் கொண்டு திரியும் யானையைப் போலவும், தெருத்தெருவாகச் சுற்றி அலையும் நாயைப் போலவும் கருதி விலக்க வேண்டும்.

நாவடக்கம் இன்றிப் பேசித் திரியும் பழிகாரரை வெறுத்து ஒதுக்க வேண்டும். உறுதியான மனம் படைத்த சான்றோர், உயர்ந்தோர் தாழ்ந்தோருடன் கூடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

பிறர் பழி கூறும் மூர்க்கர்கள் கோபம் கொண்டால் அடிப்பார்கள், கடிப்பார்கள், புழுதிவாரி இறைப்பார்கள், பல்லைக் காட்டி பயமுறுத்துவார்கள். (தொடரும்)

மனிதனாக வாழும் ஒவ்வொருவனும் மெய்யாக உரைத்தக்க ஒரே மதம், அன்பு என்ற மதமே!
~ சத்ய சாயி பாபா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத்தை அழிக்கும் சடங்குகள் மன்னாரில் தொடங்கி விட்டன

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் சமயங்கள் ஒருபோதும் மோதிக் கொள்ளவோ முரண்பட்டுக் கொள்ளவோ இல்லை.

ஈழத்தின் ஆதிச் சமயமாகிய சைவ சமயம் பிற சமயங்களையும் மதிக்கின்ற பக்குவம் கொண்டது.

அதனால் கத்தோலிக்கமும் கிறிஸ்தவ சமயமும் இந்த மண்ணில் இயங்குவதற்கு எந்தத் தடையும் இருக்கவில்லை.

இதற்கு மேலாக, கத்தோலிக்கம் மற்றும் கிறிஸ்தவ மதங்களில் இணைந்து கொண்டவர்கள் சைவ சமயத்தவர்கள் என்பதால், சைவ சமயத்தில் உள்ள குடும்ப உறுப்பினர்களிடம் கத்தோலிக்கமும் சைவமும் கலந்து இருந்தது.

இதனால் இரு சமய உறவு எந்தவகையிலும் பங்கப்படவோ ஒன்றை ஒன்று குறைபட்டுக் கொள்ளவோ இல்லை.

மாறாக, இரு தரப்பினரும் இரண்டு சமயங்களையும் பின்பற்றி வழிபட்டனர் என்பதுதான் உண்மை.

ஆம், நல்லூர்க் கந்தனையும் நயினாதீவு அம்மனையும் வழிபடுகின்ற கத்தோலிக்க சமயத்தவர்களும் மடுமாதாவையும் மானிப்பாய் மற்றும் பாசையூர் அந்தோனியாரையும் வழிபடுகின்ற சைவ மக்களும் உள்ளனர் எனும்போது, ஈழத் தமிழர்களிடையே சமயம் எந்தப் பிரிவினையையும் ஏற்படுத்தவில்லை என்பதுதான் உண்மை.

ஆம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் புனித விவிலியத்தை தமிழ் மொழிபெயர்ப்புச் செய்ய; தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் திருவாசகத்தின் உயர்வு பற்றியும் அருட்திரு. மரியசேவியர் அடிகளார் சைவ சித்தாந்தத்தையும் ஆய்வு செய்தனர்.

இவ்வாறாக நிலைமை இருக்கையில், 2009ஆம் ஆண்டில் நடந்த கொடும் போரில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் மௌனித்துப்போக, சிவபூமியாகிய ஈழத்தில் மத மாற்றம் செய்வதற்கென புதுப்புது அமைப்புகள் குப்பைக் கீரை முளைத்ததுபோல் வெளிக்கிட்டன.

வறுமையும் இழப்புகளும் ஆற்றாமையும் கொண்ட மக்களை மதமாற்றம் செய்வதில் மேற்போந்த மதமாற்றிகள் ஆசைகாட்டி மோசம் செய்து தத்தம் மதப் பிரிவுகளுக்கு மக்களை ஆட்சேர்ப்புச் செய்தனர்.

இந்த அக்கிரமம் ஒருபுறத்தில் நடந்தாக, தமிழ் இனத்தின் காலம் பிழைத்ததுபோல; தமிழ் இனம் வாழவேண்டும் என்ற சிந்தனையில் இருந்த கத்தோலிக்க மதகுருமாரில் ஒரு தரப்பினர் சைவ சமயத்தை அழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டினர்.

அதன் எதிரொலி, மன்னார் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி வளைவை தள்ளி விழுத்தி சிவசின்னங்களைச் சப்பாத்துக் காலால் மிதித்து மகாதுரோகம் செய்தனர்.

அக்கொடும் செயல் கண்டு துடித்த கத்தோலிக்க மதகுருமார்களை நாம் அறிவோம். அவர்களை நினைக்கும்போதெல்லாம் இதயம் நெகிழும். இயேசுபிரானின் போதனைகள் அவர்கள் ஊடு மக்கள் சமூகத்தை வந்து சேரும்.

என்ன செய்வது கொடியவர்களே வெற்றியடைகின்றனர்.

அதனால் மன்னாரில் எல்லாச் சமயத்தவர்களும் வணங்கிய பிள்ளையார் சிலையை அழித்துவிட்டு, அந்த இடத்தில் அந்தோனியாரை இருத்தியுள்ளனர்.

இவர்களின் நோக்கமெல்லாம் மன்னாரில் மதக்கலவரத்தை ஏற்படுத்தி சைவ மக்களை அழிப்பதுதான்.

எனினும் இதைத் தடுக்கவல்லார் யார் உளரோ! யாம் அறியோம் பராபரமே!

# மத்திய வங்கி ஆளுநராக கப்ரால் மீண்டும் நியமனம்

(கொழும்பு)

நாளை 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாளை அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமைகளைப்பொறுப்பேற்கவுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பட்டயக் கணக்காளரான இவர், இதற்கு முன்னதாக அமைச்சின் செயலாளராகவும் சுமார் 9 வருடங்கள் மத்திய வங்கியின் ஆளுநராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### வாரத்தில் 4 நாட்களே

# அஞ்சல் அலுவலகம் திறந்திருக்கும்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள எதிர்வரும் வாரத்தினுள் நாட்டிலுள்ள அனைத்து அஞ்சல் அலுவலகங்களும் 4 நாட்கள் மாத்திரமே திறக்கப்படும் என அஞ்சல்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய திங்கள், செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மாத்திரம் அஞ்சல் அலுவலகங்கள் திறக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# வவுனியாவில் விபத்து; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, தாண்டிக்குளம், கொக்குவெளி இராணுவ முகாம் முன்பாக முச்சக்கரவண்டி - இராணுவ பேருந்து மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவெளி இராணுவ முகாம் முன்பாக நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரிலிருந்து ஏ9 வீதியூடாக பயணித்த இராணுவ பேருந்து கொக்குவெளி இராணுவ முகாமிற்கு திரும்ப முற்பட்ட வேளை, எதிர்த்திசையில் வவுனியா நகர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டிச் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3.250.299)

# புற்றுநோய், தொற்றாநோய்

## தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட "பெருந்தொற்றுக்கான மன ஆரோக்கியம்" மற்றும் "இளையோரும் திறன் விருத்தியும்" எனும் தலைப்புக்களில் அமைந்த சூம் செயலியூடான கருத்தமர்வுகள் நாளை நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதுடன் நாளை மறுதினம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் காலை 9 - 12 மணிவரை முறையே "வாய்ப்புற்று நோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்" மற்றும் "தொற்றாநோய்" எனும் தலைப்புகளிலான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இக்கருத்தமர்வுகளில் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

குறித்த நிகழ்வுக்கான மேலதிக விபரங்கள் மற்றும் இணைப்புக்கள் என்பவற்றிற்கு அமைச்சின் இணையத்தள முகவரி http://edumin.np.gov.lk மற்றும் facebookpage- https://www.facebook.com/youthnorth ஆகியவற்றை அணுகவும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-6.7)

## மருத்துவக் குறிப்பு

கரட், தக்காளி இவற்றை பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிடலாம். ஆரஞ்சுப் பழத்தையும் அடிக்கடி சாப்பிட சோகை நோய் குணமாகும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## தைரியத்துடன் செயலாற்றுங்கள்

❖ கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.

❖ ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய சுமை முழுவதும் தங்கள் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக எண்ணி செயலாற்றுங்கள்.

❖ வேதாந்தம் கூறும் தர்மநெறி முறைகளை வீட்டுக்கு வீடு எடுத்துக் கூறுங்கள். ஒவ்வொருவரிடமும் இருக்கும் தெய்வீகத்தன்மையை உணர வழிகாட்டுங்கள்.

❖ கொழுந்து விட்டெரியும் ஆர்வத்தை நாலாபுறங்களிலும் பரவ விடுங்கள். பரபரப்புடன் பணியில் ஈடுபடுங்கள். எப்போதும் சுயநலம் அற்றவர்களாக இருங்கள்.

❖ நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய்க்குட்டிகளின் குரைப்பைக் கேட்டு அஞ்சாதீர்கள். எழுந்து நின்று துணிவுடன் நடை போடுங்கள்.

❖ தூய்மையுள்ளவராக நீங்கள் இருந்தால், தூய்மை இல்லாததைப் பார்க்க முடியாது. உண்மையில் உள்ளே இருப்பது தான் வெளியிலேயும் தெரிகிறது.



# தொற்றுக்குள்ளாகும் விசேட தேவையுடையோருக்கு
# சிறப்பு ஏற்பாடுகள் அவசியம்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தல்

(கொழும்பு)

**விசேட தேவையுடையோர் கொவிட் தொற்றுக்கு உள்ளான பின்னர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் போதும், இடைநிலை சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்படும் போதும் அவர்களது அன்றாட தேவைகளை நிறைவு செய்யக் கூடியவாறான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சமூகத்தில் நாளாந்தம் இனங்காணப்படுகின்ற கொவிட் தொற்றாளர்களில் விசேட தேவையுடைய மற்றும் அங்கவீனமுடைய பலரும் உள்ளடங்குகின்றனர். இவ்வாறானவர்களில் பெருமளவானோருக்கு தமது அன்றாட கடமைகளை தாமே நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே இவ்வாறான தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் போதும் , வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் போதும் அவர்களுக்கான அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் போது அல்லது இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் போது அவர்களது உதவியாளர்கள் அல்லது உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்படுவதில்லை.

இதனால் பல மரணங்கள் பதிவாகக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே இது தொடர்பில் உரிய நடைமுறையொன்றை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்று குறிப்பிட்டார்.(நி-5)

## பட்டதாரிகளின் பயிற்சிக்காலத்தை மேலும் நீடிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

அரசதுறையில் சேர்க்கப்பட்டுள்ள 60ஆயிரம் பட்டதாரிகளின் பயிற்சிக் காலத்தை மேலும் மோதம் நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளதாக அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி குறித்த செய்தி வெளியாகியுள்ளது.

அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களிலுள்ள வெற்றிடங்களை அங்கிகரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு குறித்த பட்டதாரிகளை நியமிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் கேட்கப்படும்.

இப்பயிற்சியாளர்களில் 18 ஆயிரம் பட்டதாரிகளை பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குறித்த பட்டதாரிகளின் நியமானமானது இம்மாதத்துடன் முடிவடையவுள்ளது. அத்துடன் இவர்களுக்கான கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)



கொழும்பில் அமைக்கப்பட்டு வரும் புதிய களனி பாலத்தில் பொருத்தப்பட்ட வண்ண மின்விளக்குகள் கடந்த சனிக்கிழமை இரவு ஒளிரச்செய்யப்பட்டன. இது கொழும்பில் அழகான மற்றொரு சின்னமான கட்டமைப்பாக மிளிர்கிறது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2404

**சுபேக்கா**




**ஜான்சன்**




**அனித்தா**




**உதயா**




**விதுசன்**




**தாட்சாயினி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## மன்னார் பிரதேச...

கம் செய்து வடக்கு மாகாண ஆளுநர் பிஎஸ்.எம்.சார்ள்ஸ் அரசிதழ் வெளியிட்டுள்ளார்.

இந்த பணிப்புரை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் பதவியின் பணிகள் மற்றும் கடமைகளின் போது குற்றங்களைப் புரிந்தார் என்பது விசாரணைகளில் வெளிப்பட்டுள்ள நிலையில் அவரது தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதினின் தலைமன்னார் பண்ணையில் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமும் பெட்டியும் மாடு கடத்தல் வழக்கில் தலைமன்னார் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டது.

மன்னார் நீதவான் நீதிமன்றில் உழவு இயந்திரம் மற்றும் பெட்டியும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தின் உதவியுடன் அவை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டவை என கடிதம் பெறப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதற்கு அமைய உழவு இயந்திரமும் பெட்டியும் விடுவிக்கப்பட்டன.

எனினும் அந்த உழவு இயந்திரமும் பெட்டியும் பிரதேச சபையினால் பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டு மன்னார் பிரதேச சபை உறுப்பினர்களினால் விசாரணை கோரப்பட்டது.

நீண்ட இழுபறிக்குப் பின் முன்னாள் மாவட்ட நீதிபதி கந்தையா அரியநாயகம் முன்னிலையில் நடைபெறும் தனிநபர் குழுவை வடக்கு மாகாண ஆளுநர் நியமித்திருந்தார்.

முன்னாள் நீதிபதி முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் பல தரப்பட்டவர்களிடம் சாட்சியங்கள் பெறப்பட்டன. அதன் நிறைவில் விசாரணை அறிக்கை வடக்கு மாகாண ஆளுநரிடம் ஓகஸ்ட் 2ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

அந்த விசாரணை அறிக்கையில் 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டப்பிரிவு உப பிரிவு 185 (1) (இ), (அ) ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட அதிகார மீறல் குற்றத்தை மன்னார் பிரதேச சபை தவிசாளர் சாகுல் கமீது முகம்மது முஜாஹிர் இழைத்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டது.

அதனடிப்படையில் அவர் இன்று தொடக்கம் பதவி நீக்கப்படுகிறார் என வட மாகாண ஆளுநர் அரசிதழ் ஊடாக பணித்துள்ளார். (ம-3,285)

## அரசாங்கத்துக்கு...

பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"விசேடமாக இலங்கை அரசு, ஐ.நா மனித உரிமைகள் சபையோடு இணங்கிச் செயற்படும் என்று ஜனாதிபதி கொடுத்த உத்தரவாதத்தைச் செயலில் காண வேண்டும் என்று ஆணையாளர் வலியுறுத்தியுள்ளதை நாம் அவதானித்துள்ளோம்.

இலங்கையில் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தையும், வேறு சட்ட ஆட்சிக்கு முரணான விடயங்களையும் ஆணையாளர் சுட்டிக் காட்டியதையும் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சம்பந்தமான திடமான நிலைப்பாட்டுக்காக ஆணையாளருக்கு நன்றிசெலுத்துகின்றோம்.

அதேபோல், சாட்சியங்களைச் சேகரித்தல் மற்றும் பாதுகாத்தலுக்கான பொறிமுறைஏற்படுத்துவது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் விரைவில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கின்றோம்" என்றார். (ம-3)

## எரிபொருள்...

யாது. குறைக்கவும் முடியாது.

மக்கள் தற்காலிகநெருக்கடி நிலைமைகளைச் சமாளிக்க பழகிக்கொள்ள வேண்டும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

எந்த நேரத்தில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்? எப்போது மருந்து தட்டுப்பாடு ஏற்படும்? என்பதே தெரியாத அச்சுறுத்தல் நிலையில் உள்ளோம் எனவும் அவர் கூறினார்.

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு ஏற்படப்போவதாக பொருளாதார நிபுணர்கள், அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார். (ம-3)

## நிர்வாகக்...

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 48ஆவது அமர்வு நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது.

அமர்வின் முதல் நாளை ஆரம்பித்து வாய்மொழிமூல அறிக்கையை சமர்ப்பித்து மிச்செல் பச்லெட் அம்மையார் உரையாற்றினார்.

அவர் உரையாற்றுகையில்,

அரசியல் கைதிகளின் விடுதலையை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை பாராட்டத்தக்கது.

11 இளைஞர்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மீதான விசாரணைகள் நிறுத்தப்பட்டது. துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது மற்றும் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்தவர்கள் கொலை செய்யப்பட்டமை கவலையளிக்கின்றன.

மனித உரிமை பாதுகாப்பு சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் கவிஞர் அஹ்னாப் ஜெஸீம் குற்றச்சாட்டுக்களின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான காலம் வரையறை செய்யப்பட வேண்டும்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உணவு விநியோகம் தொடர்பான அவசரகால நிலைமை பரந்த அளவில் காணப்படுகின்றது. அதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்களா? என்பதை தாம் அவதானித்து வருகின்றோம்.

சிவில் சமூக அமைப்புகள் தொடர்பாக வரையப்பட்டுள்ள புதிய சட்ட விதிகள், சிவில் அமைப்புகள் மீதான கட்டுப்பாடுகளை அதிகரிக்கும் என்ற பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவது ஏற்புடையதல்ல. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் கிளிநொச்சி உள்ளிட்ட பிராந்திய அலுவலகங்கள் மீதான நம்பிக்கை மக்களிடையே கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இழப்பீடுகளை வழங்கும் தேசிய திட்டம் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் அலுவலகத்தை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த அலுவலகத்துக்கான பணியாளர்களை உள்வாங்கும் வேலையும் நடைபெறுகிறது. இதற்கான நிதி ஒத்துழைப்புகளை உறுப்பு நாடுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். (ம-3)

## நல்லிணக்கம்...

ஜெனிவாவில் ஆரம்பமானது.

தொடக்கநாள் அமர்வில் இலங்கை தொடர்பில் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டினால் வாய்மூல அறிக்கை வெளியிடப்பட்டது.

இலங்கையில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் தொடர்ச்சியாக இராணுவமயப்படுத்தப்பட்டு வருகின்றமை ஆகியவை தொடர்பில் இதன்போது தனது அதிருப்தியை வெளிப்படுத்திய ஆணையாளர்,

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், காணாமல்போனோரின் குடும்பங்கள், ஊடகவியலாளர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் போன்றோரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகள் பெரிதும் கவலையளிப்பதாகவும் அவதானத்திற்குரியவை என்றும் தெரிவித்தார். (ம-3)

## 135...

135 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 71 ஆண்களும் 64 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 12 ஆண்களும் 14 பெண்களுமாக 26 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 59 ஆண்களும் 50 பெண்களுமாக 109 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 11,431 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் நேற்று மேலும் 2,560 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 488,482 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## நாட்டில்...

தார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் செய்தியாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

நாட்டில் அண்மைய நாட்களில் பதிவாகும் தினசரி தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது, நாட்டை மீண்டும் திறப்பதற்கான ஒரு பச்சை விளக்காக கருதப்படலாமா? என்று செய்தியாளர் கேட்டார்.

"அவ்வாறு நம்பவில்லை. கோவிட்-19 வைரஸ் தொற்று நிலைமை 100 சதவீதம் ஏற்கத்தக்கது அல்ல.

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குக்கு மத்தியில் தற்போது பதிவான தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. நாடு திறக்கப்பட்டிருந்தபோது கண்டறியப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை போன்று தற்போதும் நீடிக்கிறது.

எனவே, சுகாதார விதிமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்" என்று மருத்துவர் ஹேமந்த ஹேரத் பதிலளித்தார். (ம-3)

## ஐ.நாவின் செயற்...

இல்லை என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ், உலகத்தில் ஒரு பகுதிக்காக அல்ல அனைத்துலக நாடுகளுக்குமானதாக இந்த அமைப்பு அமைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இத்தாலியில் இடம்பெறும் ஜி20 சர்வமத மாநாட்டின் பக்க நிகழ்வாக நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வெளிவிவகார கொள்கை மற்றும் மதம் என்ற தொனிப்பொருளிலான வெளிவிவகார அமைச்சர்களின் கலந்துரையாடலின் போதே பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

மதம் மற்றும் வெளிவிவகார கொள்கை என்பவை குறித்து கவனத்தில் கொள்ள வேண்டியது இன்று முக்கியமாகின்றது. வெளிவிவகார கொள்கை வகுப்பில் ஐக்கியப்பட வேண்டும்.

பிளவுபட்டு அல்லது கடுமையான நிலைப்பாட்டிலிருந்தோ அதனை செய்ய இயலாது. புவிசார் அரசியல் மற்றும் கலாசார வேறுபாடுகளுடன் அணிசேரா அமைப்பில் இணைந்து செயற்பட்டால், அரசியலுடன் மதம் கலந்துள்ளமையானது சிறந்த விடயமாகக் கருத முடியாது.

இது வெளிவிவகார கொள்கைகளில் தாக்கம் செலுத்தும் மறுப்பும் உள்ள கொள்கை வகுப்புகளுக்கும் சவால்களை ஏற்படுத்துகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கோட்பாடுகள் இன்று பின்பற்றப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகள் நம்பிக்கை தரக் கூடியதாக இல்லை.

அங்குள்ள விதிமுறைகள் ஆதிக்கப் போக்கில் கடும்போக்குவாத நாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன. இந்த நிலையானது எம்மைப் போன்ற நாடுகளுக்கு பெரும் சவாலாகின்றது என்றார். (ம-3)

## வடக்கில் மேலும்...

இருந்தோர் என 3 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

சிதம்பரநகர் (வயது-66), புதுக்குளம் (வயது-49), தரணிக்குளம் (வயது-55) ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கோவிட் தொற்றால் மரணித்தவர்களாவர்.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த 84 வயது பெண், 68 வயது ஆண் ஆகிய இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உயிரிழந்த 78 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த நபருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும் புதுக்குடியிருப்பில் சுகவீனம் காரணமாக மரணமான 26 வயது இளைஞனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ம-3,18,33,250,299)

# பலவீனமான அரசாங்கத்தை போன்று எதிர்க்கட்சியும் பலவீனமாக உள்ளது

## எல்லே குணவங்ச தேரர்



(கொழும்பு)

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சியினர் குரல் கொடுப்பதில்லை. தேவையற்ற விடயங்களை குறிப்பிட்டுக்கொண்டு மக்கள் மத்தியில் அரசியல் இலாபம் தேடிக்கொள்கிறார்கள்.

நாட்டில் பலவீனமான அரசாங்கம் இருப்பதைப் போன்று பலவீனமாக எதிர்க்கட்சியும் உள்ளது. எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் செயற்படவேண்டும் என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், அரசாங்கம் கோவிட் தாக்கத்திற்கு மத்தியில் தேசிய வளங்களை அந்நிய நாட்டவர்களுக்கு தாரைவார்க்க முயற்சிக்கிறது. இதற்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அரசாங்கம் தவறை திருத்திக் கொண்டு சிறந்த முறையில் செயற்படும் எனக் கருதி தொடர்ந்து ஆலோசனை வழங்கினோம். அரசாங்கத்தை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. மக்கள் மன்றத்தில் சரியான தீர்வு கிடைக்கப் பெறும் என்ற காரணத்தினால் அரசாங்கத்தை அதன்போக்கில் விட்டு விட்டோம். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் தகுந்தபாடம் புகட்ட காத்திருக்கிறார்கள்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சியினரும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தேவையற்ற விடயங்களை குறிப்பிட்டுக்கொண்டு மக்களின் பிரச்சினைகளை தங்களின் அரசியல் பிரசாரத்திற்காக பயன்படுத்திக்கொள்கிறார்கள். நாட்டில் பலவீனமான அரசாங்கம் இருப்பதைப் போன்று பலவீனமான எதிர்க்கட்சியும் உள்ளது. எதிர்க்கட்சியினர் எதிர்வரும் காலங்களில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்தை விடுத்து மக்கள் மத்தியில் உண்மைத் தன்மையுடனும் பொறுப்புடனும் செயற்படவேண்டும்.

கோவிட் -19 தாக்கத்தினால் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவேளை அரசாங்கத் தரப்பினர் குறிப்பிடும் கருத்துக்கள் வெறுக்கத்தக்கதாக உள்ளது. நாட்டு மக்கள் இருவேளை உணவை மாத்திரம் உண்ணவேண்டும் என்று குறிப்பிடும் உரிமை எவருக்கும் கிடையாது. இனிவரும் காலங்களில் நாட்டு மக்கள் அரசியலில் சிறந்த தீர்மானத்தை நன்கு சிந்தித்து எடுக்கவேண்டும் என்றார்.

(ம-03)

காணி விற்பனைக்கு
பிரம்படி லேன் 2 ஆம்
ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
(வெட்டுக் கிணறு)
076 702 3565
(7933)

# நெல்லின் கொள். விலை 5 ரூபாயால் உயர்வு

(கொழும்பு)

விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நாட்டரிசி நெல்லை 55 ரூபாயுக்கு கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போதைய விலையில் இருந்து 5 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-03)

# கோவிட்டிலிருந்து குணமடைந்தோருக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்படக்கூடும்

## விசேட வைத்திய நிபுணர் துஷார தெரிவிப்பு

(கொழும்பு)

கோவிட் தொற்றுக்குள்ளாகி தீவிர நிலைமையை அடைந்து பின்னர் குணமடைந்தவர்களில் 10 - 15 சதவீதமானோருக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று ஹோமாகம மற்றும் அவிசாவளை வைத்தியசாலைகளில் சுவாச நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் துஷார கலபட தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட தொற்றாளர்கள் இரு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

இவர்களில் ஒரு தரப்பினர் தீவிர நிலைமையை அடையக் கூடியவர்களாகவும் ஏனையோர் அறிகுறிகள் அற்ற வீடுகளிலேயே சிகிச்சைப்பெறக்கூடிய நிலைமையிலும் உள்ளவர்களாவர். இந்த இரு தரப்பினர்களும் தீவிர நிலைமையை அடைந்து பின்னர் குணமடைந்தவர்களில் 10 - 15 வீதமானோருக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது.

அத்தோடு மேலும் சிலருக்கு சுவாசிப்பதில் சிக்கல், உடற்சோர்வு, பலமின்மை , இருமல், சுவை தெரியாமை உள்ளிட்ட சிக்கல்கள் ஏற்படக் கூடும். குறிப்பிட்ட சிலருக்கு மன உளைச்சல் கூட ஏற்படக்கூடும். எவ்வாறிருப்பிம் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுபவர்கள் வீண் அச்சம் கொள்ளத்தேவையில்லை. இவற்றை உரிய மருத்துவ ஆலோசனைகளின் மூலம் தொடர்ச்சியாக மருந்துகளை உட்கொண்டு குணப்படுத்தமுடியும் என்றார். (ம-03)

# மரண அறிவித்தல்

பிறப்பு
05 - 10 - 1940



இறப்பு
13 - 09 - 2021

திருமதி

## தங்கம்மா குகநமசிவாய முதலியார்

( பூமி அம்மா - குகரதி புடவையகம், நெல்லியடி )

கல்வியங்காடு செங்குந்த வீதியைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா குகநமசிவாய முதலியார் (பூமி அம்மா) நேற்று (13.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஆசிரியர்) - பாக்கியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் குகநமசிவாய முதலியாரின் அன்பு மனைவியும் குகமதி, காலஞ்சென்ற குகலட்சுமி, குகரதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வக்குமார், மதியழகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வநிதி, சானுயா, மகினன், மகிஷா, மானஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.09.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேதக்கனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராணி மில் வீதி.
நெல்லியடி. கரவெட்டி.

077 691 2738
077 893 7802

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



திருமதி

## சார்மதிதேவி சொர்ணலிங்கம்

யாழ். அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் முதலாம் ஒழுங்கை, பிறவுன் றோட் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சார்மதிதேவி சொர்ணலிங்கம் கடந்த 07.09.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சிவப்பிரகாசம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி இராமலிங்கம் - பாக்கியலக்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சொர்ணலிங்கத்தின் அன்பு மனைவியும் லிங்கேஸ்வரன், லிங்கதாசன், லிங்கவாசன், லிங்கேஸ்வரி, சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கமலாதேவி, சற்குணானந்ததேவி, பரிமளகாந்தன் மற்றும் விமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் கடந்த 11.09.2021 (சனிக்கிழமை) அன்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 37/26, முதலாம் ஒழுங்கை.
பிறவுன் றோட், யாழ்ப்பாணம்.

077 656 9792

தகவல்:-
சொர்ணலிங்கம்
சதீஸ்வரன் (மகன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.